462

# STORIES FROM TOLSTOY

# கதைமணிக் கோவை

12 JUL 1932

K. கோதண்டபாணி பிள்ளை, B.A.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தக வர்த்தகர்,
மதுரை & சென்னை.

erved. 1932. Price As. 5.

O-,3x
N32
149489

# Stories From Tolstoy

# கதை மணிக் கோவை

12 JUL 1932

R. கோதண்டபாணி பிள்ளை, B. A.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தக வர்த்தகர்,

மதுரை & சென்னை.

Rights-Reserved.] 1932 [Price As. 5.

149689
சென்னை-600 008

# முகவுரை

இளைஞர்களுக்கு உரிய ஒழுக்க முறைகளையும் நன்னெறிகளையும் இளமையிலேயே இனிதுணர்த்தி, அவர்களைப் பிற்கால வாழ்க்கையில் நாட்டின் நற்குடிகளாகத் திகழச் செய்வன நல்லறிஞர்களால் எழுதப்படும் சிறு கதைகளேயாம். இத்துறையில் முயன்று நன்னூல் பல எழுதி நாட்டுக்குப் பெருநல மளித்த நல்லறிஞர்களில் ருஷிய நாட்டுப் பேரறிஞராகிய டால்ஸ்டாய் என்பவரும் ஒருவர் என்பதை, அவர் இயற்றிய நூல்களைக்கற்ருர் அனைவரும் ஒப்புக்கொள்வர். அப்பெரியார் எழுதிய சிறு கதைகளில் விலை மதித்தற்கரிய மாணிக்கம் போன்ற மூன்று கதைகளைத் தழுவி, இனியதும் எளியதுமான தமிழ் நடையில், **கதை மணிக் கோவை** என்னும் மகுடம்புனைந்த இச்சிறு நூல் எழுதப்பட்டது. ஆதலின், இந்நூல் நம் நாட்டு இளைஞர்க்குப் பெரு நலம் பயக்க வல்லது என்பது எம் துணிபு. கலை நலஞ்சான்ற அறிஞர்கள் இதனை அவ்விளைஞர்க்குப் பயன்படச் செய்வரென் றெண்ணுகிருேம்.

பதிப்பாசிரியர்.

# பொருளடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | திருப்பதி யாத்திரை .... | .... 1 |
| 2. | ஆசைக்கும் உண்டோ அளவு ? | .... 33 |
| 3. | சிறு பொறியே பெருந்தீ .... | .... 53 |

# கதை மணிக் கோவை

## 1. திருப்பதி யாத்திரை

### I

பொன்னன், ஆனந்தன் என்ற இரண்டு கிழவர்கள் ஓர் ஊரில் வசித்தார்கள். அவர்களில் பொன்னன் பணக்காரன்; நல்லொழுக்கம் பொருந்தியவன். அவனைக் கிராமத்தார்கள் இரு முறை கிராமத்திற்குத் தலைவனாகத் தெரிந்தெடுத்தார்கள். பொன்னனுக்கு இரண்டு மக்கள் உண்டு. அவ்விருவருக்கும் விவாகமாகி, எல்லோரும் ஒரே குடும்பமாக வசித்தனர். பொன்னனுக்கு ஐம்பது வயதானபோதிலும், அவன் கிழத்தன்மையின்றி, வலிமை குன்றாமல் இருந்தான்.

ஆனந்தனுக்குப் பொன்னனை விடக் கொஞ்சம் வயதானபோதிலும், அவனும் நோயின்றியே வாழ்ந்தான். ஆனால், அவனுக்கு வயல்களிற் சென்று வேலை செய்யக் கூடிய வலிமையில்லை. அவன் ஆடு மாடுகளைத் தானே தினந்தோறும் மேய்ப்பான். அவன் மக்கள் இருவரில் ஒருவன், அயல் நாடு சென்று வியாபாரம் செய்தான்; இன்னொரு மகன், கிழவனுடனேயே தங்கியிருந்தான். கிழவன் அதிக ஏழையுமல்லன்; பணக்காரனுமல்லன். சாப்பாட்டிற்குப் போதுமான சொத்து அவனுக்கு உண்டு.

அந்த இரண்டு கிழவர்களும் திருப்பதிக்குப் போவதாகத் தங்கள் சிறு பிராயத்திலேயே வேண்டிக்கொண் டிருந்தார்கள். ஒவ்வொரு வருஷமும் அவர்களுக்கு ஏதாவது குடித்தன வேலை ஏற்பட்டுக் கொண்டே யிருந்ததால், அவர்கள் வேண்டிக் கொண்டபடி திருப்பதிக்குப் போக முடியவில்லை. கடைசியாக ஒரு நாள் ஆனந்தன் பொன்னனிடம், "இந்த வருஷம் நாம் எப்படியாவது திருப்பதிக்குப் போய் வர வேண்டும்," என்று கூறினான். அதற்குப் பொன்னன், "இந்த வருஷம் நாம் போக முடியுமென்று தோன்றவில்லை. நான் கட்ட ஆரம்பித்த என் வீடு, இன்னும் கட்டி முடியவில்லை. ஐந்நூறு ரூபாய் வரையில் நான் அதற்காகச் செலவழித்து விட்டேன். இன்னும் நூறு அல்லது நூற்றைம்பது ரூபாய்க்குள் அந்த வீட்டை முடித்துவிடலாம் என்று நினைக்கின்றேன். ஆகையால், நாம் அடுத்த வருஷம் அவசியம் திருப்பதிக்குப் போவோம்," என்றான்.

ஆனந்தன், "இனி அடுத்த வருஷம், அடுத்த வருஷம் என்று தள்ளி வைக்கக்கூடாது. நமக்கோ, வயதாயிற்று. நாளை நாளை என்று தள்ளி வைத்தால், நாளை நம்முடைய முறை நாளாகுமோ, நமனுடைய முறை நாளாகுமோ, அறியோம்," என்றான்.

பொன்னன், "ஆரம்பித்த வீட்டை அரைகுறையாகப் போட்டுவிட்டுப் போவதா? என் மக்கள் இதைக் கவனிப்பவர்களல்ல. அவர்களிடம் இதை விட்டுவிட்டுச் சென்றால், நூறு ரூபாய்க்குள் முடிகிற வேலைக்கு ஆயிரம் ரூபாய் செலவழித்து விடுவார்கள். நல்ல பிள்ளைகளை நான் பெறவில்லை. அவர்கள் இனி எப்போது நல்லொழுக்கங்களைக் கற்றுக்கொள்ளப்

போகின்றார்கள்? அவர்கள் எந்த வேலையும் நான் இல்லாவிட்டால் சரியாகச் செய்வதில்லை," என்றான்.

ஆனந்தன், "நீ இன்னும் எத்தனை வருஷம் அவர்களுக்கு உதவியாக இருக்க முடியும்? நீ இறந்த பிறகு அவர்கள் தானே உன் வேலைகள் எல்லாவற்றையும் பார்ப்பார்கள்? நீ இப்பொழுதே அவர்களை அந்த வேலைகளைப் பார்க்கும்படி விட்டால் என்ன? நீ எல்லா வேலைகளுக்கும் முன்னே நின்றுகொண்டு, அவர்களைக் கெடுக்கின்றாய். எல்லாவற்றையும் அவர்களிடம் ஒப்புவித்துவிட்டு உடனே புறப்படு. அவர்கள் யாவற்றையும் சரியாகப் பார்த்துக்கொள்வார்கள்," என்று பொன்னனுக்குப் புத்தி கூறினான்.

பொன்னன் இவைகளைக் கேட்டு, சிறிது நேரம் ஆலோசனை செய்து, பிறகு, "பணம் இல்லையே! இருந்த பணத்தை எல்லாம் வீடு கட்டுவதற்காகச் செலவழித்து விட்டேனே," என்றான்.

ஆனந்தன், "பணத்திற்கென்ன? மனமிருந்தால்,வழியுண்டு. பணம் இல்லாவிட்டால் நான் நூறு ரூபாய் உனக்குத் தருகிறேன். அடுத்த சனிக்கிழமை கட்டாயம் புறப்பட வேண்டும்," என்றான்.

பொன்னன், சிரித்து, "நீ அவ்வளவு பணக்காரன் என்பது எனக்குத் தெரியவில்லை. உனக்குப் பணம் எப்படிக் கிடைக்கும்?" என்று வினவினான்.

ஆனந்தன், "என் ஆடு மாடுகளில் சிலவற்றை விற்றுத் தருகிறேன். திருப்பதிக்கு உடனே புறப்படவேண்டும். இனித் தாமதிக்கக் கூடாது. நமக்கோ, வயதாயிற்று. 'இன்றைக் கிருந்தாரை, நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்லை.' ஆகையால் அடுத்த சனிக்கிழமையே புறப்பட்டுப் போய்,

இக்கட்டை யிருக்கையிலேயே நாம் இதைச் செய்து முடிக்கவேண்டும். 'இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?' " என ஆர்வத்துடன் கூறினான்.

## II

அன்று இரவு பொன்னன், ஆனந்தன் சொன்ன விஷயங்களைப்பற்றி நினைத்துப் பார்த்தான். அவன் சொன்னவைகள் மிகவும் பொருத்தமுள்ளவைகளாகத் தோன்றின. "நாம் இவ்வுலகத்திற்கு வேண்டியவற்றையே சேகரித்து வைக்கிறோமே ஒழிய, செல்லும் உலகிற்கு வேண்டியதொன்றையும் தேடுவதில்லை. நீரிற்குமிழி இக்காயம். இக்காயம் உள்ள போதே நாம் திருப்பதி போகவேண்டுவதவசியம். இனி இதை நாளைக்கு நாளைக்கு என்று தள்ளி வைக்கக் கூடாது," என்று நிச்சயம் செய்துகொண்டு, அதிகாலையில் ஆனந்தனிடம் போய், தான் அவன் சொன்னபடி திருப்பதிக்குப் போவதற்குச் சம்மதித்ததைத் தெரிவித்தான்.

சனிக்கிழமை யன்று அவர்கள் திருப்பதிக்குப் புறப்பட்டார்கள். பொன்னன் தன்னுடைய மக்களைக் கூப்பிட்டு, வீட்டைச் செம்மையாகக் கட்ட வேண்டும் என்றும், அறுவடையைத் தகுந்த காலத்தில் செய்ய வேண்டும் என்றும், ஒவ்வொரு வயலிலும் எருவைச் சரிவரப் போட வேண்டும் என்றும், தோட்டங்களைச் சரிவரத்தினந்தோறும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் நினைத்து நினைத்து அவர்களுக்குச் சொன்னான். ஆனந்தனோ, தன் மனைவியும் மகனும் எல்லாவற்றையும் சரியாகப் பார்த்துக்கொள்ளுவார்கள் என்ற முழு

நம்பிக்கையுடனிருந்ததால், அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை. "உங்களுக்கு நான் ஒன்றும் சொல்ல வேண்டுவதில்லை. நீங்கள் நடந்துகொள்ள வேண்டிய விதமும், செய்யவேண்டிய காரியங்களும் உங்களுக்கே தெரியும்," என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். அவன் மனைவி சேர்த்து வைத்திருந்த முப்பது ரூபாயையும் அவன் மருமகள் வைத்திருந்த இருபது ரூபாயையும் மனமுவந்து கொடுத்தார்கள். அவன் மகன், சில ஆடுகளை விற்று, ஐம்பது ரூபாய் கொடுத்தான். 'இந்த நூறு ரூபாய் போதும்,' என்று ஆனந்தன் பெற்றுக்கொண்டு, கவலையற்ற மனத்துடனும் களிப்படைந்த முகத்துடனும் புறப்பட்டான்.

பொன்னனிடம் ஐந்நூறு ரூபாய் இருந்தது. அதில் இரு நூறு ரூபாயை எடுத்துக்கொண்டான். பாக்கியிருந்த மூந்நூறு ரூபாயைத் தன் மனைவியிடம் கொடுத்து, பத்திரமாக வைத்திருக்கும்படி சொன்னான். தன் மக்கள் அந்த வருஷ வருமானத்தை வீண் செலவு செய்யாமற் பார்த்துக் கொள்ளும்படிக்கும் சொன்னான்.

அவ்விரண்டு கிழவர்கள் வீட்டிலும் அவர்கள் வழி நடைக்கு வேண்டிய அவல், மா முதலியன தயார் செய்து சிறு மூட்டைகளாகக் கட்டிக் கொடுத்தார்கள்.

அவ்விரு குடும்பத்தார்களும் அக்கிழவர்களைப் பின் தொடர்ந்து ஊர் எல்லை வரையிற் சென்று, கடவுளைப் பிரார்த்தித்து, வழி அனுப்பினார்கள்.

அவர்கள் காலத்தில் இரயில் வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் இல்லை. ஆகையால், கால்நடையாகவே திருப்பதிக்குச் செல்ல வேண்டும். நூற்றுக்

கணக்கான ஜனங்கள் வெகுதூரத்திலிருந்து சிறிதும் கஷ்டம் தோன்றாமல் வருஷா வருஷம் திருப்பதிக்குப் போவார்கள்.

அக்கிழவர்கள் தங்கள் ஊரிலிருந்து திருப்பதிக்குப் போக இரண்டு மாதம்செல்லும். அவர்களில் ஆனந்தனால் பொன்னனைப்போல வேகமாக நடத்தல் இயலாது. ஆனந்தனுக்கு, 'இறைவன் திருப்பதியிற் போய்ச் சேருவேனோ! அங்குத் திருக்கோவில் கொண்ட அண்ணலைக் கண்ணாரக் காண்பேனோ! கண்டு களிப்பேனோ!' என்ற எண்ணங்களே மனத்தில் குடி கொண்டன. அவன் வீட்டை விட்டுப் புறப்பட்ட வுடனே தன் குடும்ப விஷயங்களை அறவே மறந்துவிட்டான். அவன் நினைத்தது இறைவனைப் பற்றியே யன்றி, வேறொன்றைப் பற்றியுமன்று; கூறியதும் இறைவனுடைய திருநாமமேயன்றி வெறும் பேச்சு ஒன்று மன்று

பொன்னன் சிறிதும் கஷ்டமின்றி நடந்தான். உடல் திருப்பதியை நோக்கிச் சென்றபோதிலும், மனம் அவன் வீட்டைச் சுற்றிக்கொண்டே யிருந்தது. "நம் மக்கள் வீட்டைச் சரியாகக் கட்டுவார்களா? சரியான காலத்தில் அறுவடை செய்வார்களா? சரியாக எரு விட்டுச் சாகுபடி செய்வார்களா? குத்தகை நெல்லைக் குறையாதபடி அளந்து வாங்குவார்களா? தோட்டத்திலுள்ள பொருள்கள் திருட்டுப் போகாதபடி பார்த்துக்கொள்ளுவார்களா? நம் மருமக்கள் இருவரும் நம் மனைவியோடு சண்டை போடுவார்களோ!" என்ற இந்த விதமான எண்ணங்களே அவன் மனத்தில் குடி கொண்டிருந்தன. அவன்

சில வேளைகளில், 'நாம் திரும்பி ஊருக்குப் போய் விடலாமா!' என்று கூட நினைத்தான்.

## III

இரண்டு கிழவர்களும் ஒருமாதம் நடந்து, பாதி தூரத்தைக் கடந்தார்கள். இந்த ஒரு மாதம் வரையில் ஒரு கஷ்டமும் அவர்களுக்குத் தோன்றவில்லை. இதன் பிறகு அவர்கள் சென்ற வழியில் உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை. ஐந்து வருஷமாக மழையின்றி வருந்திய ஊர்கள் வழியாக அவர்கள் செல்ல வேண்டியிருந்தது. ஒரு காலத்தில் செழிப்பாக இருந்த ஊர்களெல்லாம் பாழாகிக் கிடந்தன. மழை யில்லாததால், விளைவில்லாமற் போயின. அனேக ஏழைகள் உணவின்றி மாண்டார்கள். அனேகர் பிச்சை எடுத்துண்ண அயல் நாடுகளுக்கு ஓடிவிட்டனர். தனவந்தர்களும் கஷ்டப்படுகிற நிலையிலிருந்தார்கள். உணவுப்பொருள்கள் கிடைத்த ஓர் ஊரில் கிழவர்கள் தாங்கள் தூக்கிச் செல்லக்கூடிய அளவு அவற்றை வாங்கிக்கொண்டார்கள்.

ஆனந்தனிடத்தில் ஒரு கெட்ட பழக்கமிருந்தது: அவன் அடிக்கடி பொடி போட்டுக்கொள்ளுவான். அதுகெட்ட பழக்கமென்பது அவனுக்குத்தோன்றிய போதிலும், அதை அவனால் விட முடியவில்லை. அப்பழக்கத்தை விட்டுவிட வேண்டுமென்றே அவன் தன்பொடி டப்பியை வீட்டிலேயே வைத்துவிட்டு வந்தான். ஆயினும், பொடி கொஞ்சமாவது அவன் உபயோகப்படுத்தாமல் இருக்கமுடியவில்லை. வழிப் பிரயாணிகளிடத்தில் இரவலாக வாங்கிச் சில வேளை மாத்திரம் உபயோகப்படுத்தினான். அப்பழக்கத்

திற்கு அடிமையான பிறகு அதை மீறி நடக்க முடியுமா? சில நாள் கழித்துப் புதிதாக ஒரு டப்பி வாங்கிக்கொண்டான். அவன் பொடி உபயோகிப்பதைப் பற்றிப் பொன்னன் ஏளனம் செய்தான். அஃது ஒழுங்கீனம் என்றும், புண்ணிய யாத்திரையின்போது அதை உபயோகப்படுத்துவது பெரிய பாவம் என்றும் கூறித் தன் நல்லொழுக்கத்தைப் பற்றித் தன்னைத் தானே புகழ்ந்துகொண்டான். அதற்கு முன் ஆனந்தன், 'இப்பழக்கம் என்னை அடிமை கொண்டு விட்டதே! நான் இதை விட முடியவில்லையே!' என்று வருத்தப்பட்டான்.

இப்படி இருவரும் பேசிக்கொண்டு சிறிது தூரம் சென்றனர். ஆனந்தனுக்குத் தாகம் எடுத்தது. அவர்கள் சென்ற வழியில் ஊர் ஒன்றுமில்லை. சிறிது தூரத்தில் ஒரு சிறு கிராமம் தெரிந்தது. தாகம் அதிகமாக இருக்கிறதென்றும் சமீபத்தில் தெரிந்த அந்தக் கிராமத்திற்குப் போய்த் தண்ணீர் பருகி வரவேண்டும் என்றும் ஆனந்தன் பொன்னனிடம் தெரிவித்தான். பொன்னன் தனக்குத் தாகமில்லை என்று பதில் கூறினான். தனக்காகக் காத்திருக்க வேண்டா என்றும், தான் தாகத்தைத் தணித்துக்கொண்ட உடனே வந்து சேர்ந்து கொள்ளுவதாகவும் கூறி, பொன்னனை முன்னே மெதுவாகப் போகும்படி சொல்லிவிட்டு, ஆனந்தன் அச்சிற்றூருக்குச் சென்றான்.

அங்கே ஆடவரேனும் பெண்டிரேனும் காணப்படவில்லை. பல வீடுகள் ஒருவரும் குடியின்றித் திறந்தபடி இருந்தன. பல பாழடைந்திருந்தன. ஒரு வீட்டில் மெல்லியகுரலாக அழுகை கேட்டது. அவன் அந்த வீட்டிற்குச் சென்றான். அதன் கதவு அடைத்

திருந்தது. அவன் வெளியே சென்று, 'ஐயா,' என்றும், 'அம்மா,' என்றும் கடவுளுடைய திருநாமங்களைச் சொல்லியும், தண்ணீர் கேட்டான். ஒருவரும் பேசவில்லை. கதவும் திறக்கப்படவில்லை. ஆனால், அந்த வீட்டிற்குள்ளே ஒரு சிறு பிள்ளையின் தேம்பல் மாத்திரம் கேட்டது. 'இந்த வீட்டில் ஜனங்கள் இருக்கிறார்கள் என்பது நிச்சயம். தாகத்தால் வருந்திய ஒருவனுக்குத் தண்ணீர் கொடுக்காதபடி அவ்வளவு உலோபிகளாக மானிடர்கள் இருக்க முடியுமா? ஏதோ இவர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கும்போ லிருக்கிறது! இதை அறியவேண்டும்,' என்று கிழவன் கதவின் சமீபத்தில் போய்க் கதவைத் தட்டினான்; அப்போதும் ஒருவரும் பேசவில்லை.

## IV

ஆனந்தன் கதவைத் தள்ளினான். கதவு திறந்து கொண்டது. அந்த வீட்டின் கூடத்தில் ஒரு கிழவி தலையில் கைகளை வைத்துக்கொண்டு, குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் வயிறு உப்பிய மெலிந்த தேகத்தையுடைய ஒரு சிறு குழந்தை அவள் சேலையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, 'சாதம்; சாதம்,' என்று அழுதுகொண்டிருந்தது.

கிழவன் வீட்டிற்குள் புகுந்தான். அங்கே நாற்றம் பொறுக்க முடியாதபடி வீசியது. சமையல் அறைக்குள் அடுப்பின் பக்கத்தில் ஒரு பெண் பிள்ளை தரையில் கிடந்து அங்குமிங்கும் புரளுவதையும், அவளுடைய அவயவங்கள் வலிப்பினால் முடக்கப்படு

வதையும் கிழவன் கண்ணுற்றான். அவள் ஏதோ வியாதியால் கஷ்டப்படுபவள் போலத் தோன்றினாள். கூடத்திலிருந்த கிழவி, தலை நிமிர்ந்து ஆனந்தனைப் பார்த்து, மெல்லிய குரலில், "ஐயா, உமக்கு என்ன வேண்டும்? உமக்குக் கொடுக்க எங்களிடம் ஒன்றுமில்லை," என்று கூறினாள்.

ஆனந்தன் அவள் சமீபத்திற் போய், "தாயே, எனக்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்," என்றான்.

கிழவி, "வீட்டில் தண்ணீர் இல்லை. உமக்குத் தண்ணீர் எடுத்து வந்து கொடுப்பாருமில்லை. எங்களிடம் ஒன்றுமில்லை," என்றாள்.

ஆனந்தன், "அந்தப் பெண் பிள்ளை இறக்கக் கூடிய நிலையிலிருக்கிறாளே! அவளைக் கவனிப்பதற்கு இங்கு ஒருவருமில்லையா?" என்று வினவினான்.

கிழவி, "என் மகன் கொல்லைப் புறத்தில் சுருண்டு விழுந்திருக்கின்றான். இந்நேரம் அவன் இறந்து போயிருப்பான். எங்களை யார் கவனிப்பார்கள்?" என்று கண்ணீர் விட்டுத் தழுதழுத்த குரலிற் கூறினாள்.

ஆனந்தன் இன்னும் விவரமாக அந்தக் கிழவியைக் கேட்க ஆரம்பித்தான்.

அதற்குள் கொல்லைப் புறம் படுத்திருந்த ஒருவன் எழுந்து, சுவரைப் பிடித்துக்கொண்டே உள்ளே வர முயன்றவன், நடக்க முடியாமல் தடுமாறிக் கொல்லை வாயிற்படியில் விழுந்தான். ஆனந்தன் அவனிடத்தில் ஓடிப்போய், அவனைத் தூக்கினான். அவன் உட்கார்ந்து, 'நாங்கள்....இறக்கப்....போகிறோம்'....என்று பேச முடியாமல் மெதுவாக விட்டு

விட்டுக் கூறினான்; கிழவியினிடம் நின்ற சிறு பையனைக் கிழவனுக்குச் சுட்டிக் காட்டினான். பிறகு அவனாலும் ஒன்றும் பேச முடியவில்லை. கண்ணீர் விட்டழுதான். அவன் படுகிற கஷ்டத்தைப் பார்த்த ஆனந்தனுக்கும் கண்ணீர் ததும்பியது. அவன் அழுகையை அடக்கிக்கொண்டு தன் தோளிற் கோத்திருந்த மூட்டையைக் கீழே இறக்கினான். அதை அவிழ்த்து, அதில் நனைத்துவைத்திருந்த அவ லில் சிறிதெடுத்து அம்மனிதனிடம் கொடுத்தான். அம்மனிதன் அது தனக்கு வேண்டா என்று தலையை அசைத்துக் கிழவியின் பக்கத்தில் நின்ற சிறுவனிடம் அதைக்கொடுக்கும்படி கையாற் சாடை காட்டினான். ஆனந்தன் அதை அச்சிறுவனிடம் கொடுக்க, அச் சிறுவன் அதைத் தன் இரண்டு கையாலும் வாங்கி, அவசரமாக உண்டான். அதைப் பார்த்துச் சமையல் அறைக்குள்ளிருந்து ஒரு சிறுமி தரையில் நகர்ந்து கொண்டே வந்தாள். கிழவன் அவளுக்கும் கொஞ்சம் அவல் எடுத்துக் கொடுத்தான். கிழவிக்கும் கொஞ் சம் அவலைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னான். கிழவி சாப்பிட்டாள். கிழவியின் தொண்டை வறண்டு இருந்ததால், அவல் அதில் அடைத்துக்கொண்டது. அவள், 'தண்ணீர்! தண்ணீர்!!' என்று கத்தினாள். "ஐயோ! நேற்றுத்தண்ணீர் எடுக்கப் போனேன். போக முடியாமல் தடுமாறி விழுந்து விட்டேன்," என்றாள். ஆனந்தன் கிணறு எங்கே இருக்கிறதென் பதைத் தெரிந்துகொண்டு, அங்கே ஓடிப்போய், தண் ணீர் எடுத்து வந்து, குழந்தைகளுக்கும் கிழவிக்கும் கொடுத்தான். அவள் மகனுக்கு ஆனந்தன் மறுபடி யும் கொஞ்சம் அவல் கொடுத்துச் சாப்பிடும்படி

வேண்டிக்கொண்டான். அவன் சாப்பிடக்கூடிய நிலைமையில் இல்லை. அவன் மனைவி சமையலறையில் பிரக்ஞையற்றுப் புரண்டுகொண்டிருந்தாள்.

ஆனந்தனுக்கு அவர்களை அந்த நிலைமையில் விட்டுவிட்டுப் போக மனம் துணியவில்லை. அதனால், அவன் கோடரி ஒன்றை எடுத்துக்கொண்டு போய்க் கொஞ்சம் விறகு வெட்டிக்கொண்டு வந்தான்; அடுப்பு மூட்டித் தன்னிடமிருந்த உணவுப் பொருளைக் கொண்டு கஞ்சி காய்ச்சி, கிழவியின் மகனுக்கும், அவன் மனைவிக்கும் அதைக் கொடுத்தான்.

## V

கிழவியின் மகன், கஞ்சியைச் சாப்பிட்ட பிறகு களை தெளிந்து, தன் குடும்பத்தின் பரிதாப நிலைமையைக் குறித்து ஆனந்தனை நோக்கி, "ஐயா, நாங்கள் பணக்காரர்களல்ல. ஆனாலும், எங்களுக்குச் சாப்பாட்டிற்குப் போதுமான சொத்து இருந்தது. சென்ற வருஷம் எங்களூரில் மழை யில்லாமற் போயிற்று. ஏரிகள் குளங்கள் கிணறுகள் இவைகளிலெல்லாம் தண்ணீர் வற்றிப்போயிற்று. அதனால் விளைவில்லாமற் போயிற்று. பல ஏழைகள் ஊரை விட்டுப் பிழைப்புக்கு இடம் தேடிச் சென்றார்கள். எங்களுக்கு வருஷா வருஷம் கிடைத்த தானியங்களையும் உணவுப் பொருள்களையும் நாங்கள் செட்டாகச் செலவழித்து வந்தோமாகையால் எங்களிடம் பழைய தானியங்களும் உணவுப் பொருள்களும் மீதியிருந்தன. ஆகையால், " எப்படியாவது இவற்றைக் கொண்டு நாம் சிறிது காலம் உயிர் வாழ்ந்திருக்கலாம். அதற்குள் மழை பெய்துவிடும். நாடும் செழிக்

கும்,'' என்று நம்பி, ஊரிலேயே தங்கியிருந்தோம். ஆறு மாதத்திற்குள் உணவுப் பொருள்கள் செலவழிந்துவிட்டன. எங்களிட மிருந்த ஆடு மாடுகள், சாமான்கள் முதலியவைகளை விற்று உணவுப் பொருள்கள் வாங்கிச் சிலநாள் கழித்தோம்; பிறகு கடன் வாங்கினோம். சிலர் முதலில் கடன் கொடுத்தார்கள். வறுமை எங்கும் அதிகரிக்கவே, கடன் கொடுப்பாரும் எவருமில்லை. நானும், என் மனைவியும், கூலி வேலை செய்து பிழைக்கலாம் என்று முயன்றோம். வேலை கிடைக்கவில்லை. என் சிறு மகனும் என் தாயாரும் ஊர் ஊராகச் சென்று பிச்சை எடுத்தார்கள். சில நாளைக்குப் பிறகு மனிதர்கள் பிச்சை இடுவதையும் நிறுத்திவிட்டார்கள். ஆகையால், நாங்கள் மூன்று நாளைக்கொருதரம் சாப்பிட்டு வந்தோம். பிறகு மூன்று நாளைக்கொரு முறையும் உணவு கிடைக்கவில்லை. அதனால், காய் கிழங்குகளைத் தின்ன ஆரம்பித்தோம். அவைகள் கிடைப்பதும் அரிதாயிற்று. பின்பு தழைகளைத் தின்றோம். அதனால், என் மனைவிக்கு வியாதி கண்டது; நானும் நோயால் பீடிக்கப்பட்டேன். இறக்கும் தருணத்திலிருந்த எங்களைக் காப்பாற்றக் கடவுளே மனமிரங்கி உங்களை இங்கே அனுப்பினார் போலும்!'' என்று பலவிதமாகக் கூறி, நன்றி பாராட்டினான்.

ஆனந்தன் இவைகளைக் கேட்டுத் தன் திருப்பதி யாத்திரையை மறந்துவிட்டான். அன்று இராத்திரி அவர்கள் வீட்டிலேயே தங்கி, அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்தான். அவன் இரவிற் கண் விழித்திருந்து நோயால் வருந்திய கிழவியின்

மருமகளுக்கு வைத்தியம் செய்தான். தான் யாத்திரைக்கு வைத்திருந்த உணவுப் பொருள்களைக் கொண்டு மூன்று நாள் அவர்களைக் காப்பாற்றினன்.

மூன்றும் நாள் சிறுபையனும் பெண்ணும் வெளியே நடந்துபோய் விளையாடினார்கள். ஆனால், அவர்களின் தாயும் தகப்பனும் சௌக்கிய மடையவில்லை. ஒருவாரம் கழித்து அவர்கள் தகப்பன் சுவரைப் பிடித்துக்கொண்டு சிறிது தூரம் நடந்தான். அவர்கள் தாயோ, படுக்கையிலிருந்தாள்.

கிழவனிடமிருந்த உணவுப் பொருள்களெல்லாம் ஆகிவிட்டன. தான் திருப்பதி போகவேண்டுமே யென்ற எண்ணமும், அவர்களை அந்நிலைமையில் விட்டுச் சென்றால் அவர்கள் மறுபடியுமிறக்கவேண்டியவர்களே யன்றிப் பிழைப்பதற் கிடமில்லையே என்ற எண்ணமும், அவன் மனத்தைப் புண்படுத்தின. அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கடவுளை நினைத்துப் பிரார்த்தனை செய்தான். "நாம் இவர்களுக்குச் சிறிது கஞ்சி கொடுத்துவிட்டுப்போய் விடலாம் என்று நினைத்தோம். அவ்வெண்ணம் நம்மைப் பிடித்துக்கொண்டது. ஒரு வாரம் ஆகிவிட்டதென்பது கூடத் தோன்றவில்லை. இவ்வளவு தான் நம்மா லியன்றது. எல்லோரையும் காப்பாற்றுவதென்றால் நம்மால் இயலும் காரியமா? நம்மால் கூடியவற்றைச் செய்தோம். இனிக்கடவுள் பொறுப்பு," என்று நினைத்து, அன்று இரவு அவன் தன் மூட்டையை எடுத்துக் கொண்டு போகப் புறப்பட்டான். சிறிது தூரம்போனன். போக மனம் வரவில்லை. 'இந்த நிலைமையில் இவர்களை நாம் விட்டுச்சென்றால், இவர்கள் எப்படி

ஜீவிப்பார்கள்?' என்று எண்ணித் திரும்பி அவர்கள் வீட்டிற்கே வந்துவிட்டான். தன் மூட்டையை ஒரு புறம் வைத்துவிட்டுத் திண்ணையில் தூங்கினுன்; தான் திருப்பதிக்குப் போகப் புறப்படுவது போலவும், அந்த வீட்டுச் சிறு குழந்தைகள் 'தாதா, அவல்; தாதா, அவல்,' என்று தன் கால்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுவதுபோலவும் கனவு கண்டான்; உடனே எழுந்திருந்து, "கடவுள் நம்மைப் பரிசோதிக்கவே இப்படிச் செய்திருக்கின்ருர் போலும்! நமக்குத் தாகம் உண்டாகவும், நாம் இவ்விடம் வரவும், இவர்களிடத்தில் நமக்கு இரக்கம் உண்டாகவும் நேர்ந்தது கடவுட் செயலே. எல்லா மனிதர்களையும் படைத்தவர் கடவுள் ஒருவரே. ஒரு மனிதன் இறந்த பிறகு அவனுக்கு உயிருண்டாக்க முடியுமா? உணவில்லாமல் ஒருவன் இறப்பதைத் தடுப்பது எவ்வளவு புண்ணியமானது! 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.' மனிதர் உணவில்லாமல் இறப்பதைத் தடுக்கக்கூடிய சக்தி என்னிட மிருந்தும், நான் இதைத் தடுக்காமலிருந்தால், அதனுல் வரும் பாவத்திற்குக் கணக்கில்லை. இந்தப் பாவத்தை நான் சம்பாதித்துக்கொண்டு திருப்பதிக்குப் போவதால் கிட்டும் பலன் என்ன? கடவுளே சகல உயிர்களிடத்திலு மிருக்கிருர். உயிர்களிடத்திலிருக்கிற கடவுளுக்குப் பிரியப்படும்படி நடந்துகொள்வதைவிட வேறு வழிகளில் அதிக பலன் கிடைக்குமோ? இவர்களுக்கு ஒரு மாதத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சேகரித்து வைத்துவிட்டால், ஒரு மாதத்தில் இவர்கள் சௌக்கியமடைந்து பிழைக்கும் வழியைத் தேடிக்கொள்ளு

வார்கள். இப்போது இவர்கள் அயல் நாடுகளுக்குப் போவதற்குக் கூடச் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள்,' என்று பலவாறாக எண்ணிக்கொண்டிருந்தான்.

பொழுது விடிந்தது. தான் பக்கத்து ஊருக்குப் போய் வருவதாகச் சொல்லிக்கொண்டு, பல ஊர்களுக்குச் சென்று, எங்கேயாவது உணவுப் பொருள்கள் கிடைக்குமா என்று விசாரித்தான்; அன்று முழுவதும் அலைந்து, கடைசியாகத் தானியங்களும் மற்ற உணவுப் பொருள்களும் ஒரு தனவந்தனிடம் இருப்பதாகத் தெரிந்து, அவனிடம் சென்று, விலை அதிகமாக இருந்தபோதிலும் ஒரு மாதத்திற்குப் போதுமான அளவு தானியங்களையும் உணவுப் பொருள்களையும் வாங்கினான்.

அவைகளைக் கிழவன் தூக்கிச்செல்ல முடியவில்லை. அதனால், வாடகைக்கு ஒருவண்டி அமர்த்தினான். வண்டியில் அச்சாமான்களை ஏற்றிக்கொண்டு வந்தபொழுது, நடு இராத்திரியாயிற்று. வீட்டில் எல்லோரும் தூங்கிவிட்டார்கள். சாமான்களை இறக்கிக்கொண்டு ஆனந்தன் வண்டிக்காரனை அனுப்பிவிட்டான்; கதவைத் தள்ளினான். கதவு திறந்துகொண்டது. சாமான்களை எல்லாம் சத்தம் செய்யாமல் வீட்டிற்குள் கொண்டுபோய் வைத்தான். தன் சிறு மூட்டையை எடுத்துத் தன் பக்கத்தில் வைத்துக் கொண்டு திண்ணையிற் படுத்தான். தூக்கம் வரவில்லை. சற்றுநேரம் படுத்திருந்து எழுந்தான். "பொழுது விடியுமுன் நாம் இவர்களை விட்டுவிட்டுப் போய்விட வேண்டும். விடிந்தால், இவர்களை விட்டுச் செல்ல மனம் துணிவு கொள்ளாது. 'பேயோடாயினும், பிரிவெனில் கொடிது.' இவர்களால் நமக்கு ஏற்பட்ட

பந்தம் போதுமானது,'' என்று, தன் மூட்டையை எடுத்துக்கொண்டு, திருப்பதிக்குப் போகிற பாதை வழியே நடந்தான்.

## VI

ஆனந்தன் ஐந்து மைல் தூரம் நடந்த பிறகு பொழுது விடிய ஆரம்பித்தது. ஒரு மரத்தடியில் உட்கார்ந்து தன்னிடம் மீதியிருந்த பணத்தை எண்ணிப் பார்த்தான். பதினேழு ரூபாயும் எட்டு அணவும் இருந்தன. "சரி ; இந்தப் பணத்தைக் கொண்டு திருப்பதிக்குப் போகமுடியாது. நம் நண்பன் பொன்னன் மாத்திரம் தனியே போக வேண்டுவதுதான். அவன் போனால் போதுமானது. இனி நாம் இறக்கு முன் எப்போது திருப்பதிக்குப் போக முடியும்? நாம் வேண்டிக்கொண்டது நிறைவேறவில்லை. கடவுளுக்கு நமது எண்ணம் தெரியும். ஆதலால், கடவுள் நம்மை மன்னிப்பார்,'' என்று தானே சமாதானம் செய்துகொண்டு, வீட்டிற்குத் திரும்பினான்.

அவன் தான் தங்கியிருந்த ஊரின் வழியே போகாமல், வேறுபாதை வழியே நடந்தான். முன்பு பொன்னனோடு நடந்தபோது ஆனந்தனுக்கு நடப்பது கஷ்டமாக இருந்தது. இப்போது கஷ்டம் ஒன்றும் தோன்றவில்லை. வேகமாக நடந்து, ஒரு மாதத்திற்குள்ளாகவே தன் ஊர்வந்து சேர்ந்தான்.

கிழவன் திரும்பி வீடு வந்து சேர்ந்ததைப்பற்றி அவன் வீட்டில் எல்லோரும் சந்தோஷப்பட்டனர் ; பொன்னனை விட்டுவிட்டு அவன் திரும்பிய விஷயத்தைப் பற்றிக் கேட்டனர். ஆனந்தன் நடந்த விஷயங்களை அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை. "நான் கடவு

ளுடைய உத்தரவுப்படி நடந்தேன். நான் திருப்பதிக்குப் போவதில் அவருக்குப் பிரியமில்லை. பணமெல்லாம் வழியிலேயே செலவழிந்துவிட்டது. பொன்னனும் எனக்கு முந்திப் போய்விட்டான். நான் அவனைப் பின் தொடர்ந்து போக முடியவில்லை. ஆகையால், நான் திரும்பி வந்துவிட்டேன். கடவுளின் பொருட்டு என்னை மாத்திரம் மன்னியுங்கள்," என்று மட்டும் சொன்னான்; தன்னிடம் மீதியிருந்த பணத்தைத் தன் மனைவியிடம் கொடுத்தான்; தன் குடும்ப விஷயங்களைப்பற்றி விசாரித்தான். குடும்ப காரியங்கள் எல்லாம் நன்றாகக் கவனிக்கப்பட்டிருந்தன. ஒரு குறைவும் காணப்படவில்லை.

பொன்னன் வீட்டு ஜனங்கள் ஆனந்தனிடம் வந்து, பொன்னனைப்பற்றி விசாரித்தார்கள். தன் வீட்டிற் சொன்ன விதமே அவர்களுக்கும் அவன் பதில் சொன்னான்: "நான் பின் தங்கிவிட்டேன். அவன் எனக்கு முன்னே சென்றான். அவனை நான் போய்ச் சேரு முன் என் பணம் செலவாகிவிட்டது. ஆகையால், நான் திரும்பிவிட்டேன்," என்று விவரித்தான்.

அந்த ஊரார்கள், "சமர்த்தனான ஆனந்தனுக்கு எப்படி மூடத்தனம் வந்தது! திருப்பதிக்குப் போவதாகப் புறப்பட்டுப் போய்த் திருப்பதிக்குப் போகாமல் திரும்பி விடுவானா!" என்று ஆச்சரியப்பட்டார்கள்; சில நாள் வரையில் அதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்; பிறகு அதை மறந்துவிட்டார்கள். ஆனந்தன் முன்போலவே தன் வீட்டு வேலைகளைப் பார்த்து வந்தான்.

ஆனந்தனை விட்டுப் பிரிந்த பொன்னன், ஆனந்தன் வருவான் என்று பாதையிலேயே நெடுநேரம் தங்கியிருந்தான். ஆனந்தன் வரவில்லை. 'நாம் சிறிது தூரம் போனால், அதற்குள் அவன் வந்துவிடுவான்,' என்று எண்ணிச் சிறிது தூரம் போய், ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்தான். அப்பொழுதும் ஆனந்தன் வரவில்லை. பொன்னனுக்குத் தூக்கம் வந்தது. அம்மர நிழலில் படுத்துத் தூங்கிவிட்டான். பொழுது போகிற சமயம் எழுந்திருந்து பார்த்தான். ஆனந்தன் அப்போதும் காணப்படவில்லை. 'ஒருக்கால் நான் படுத்து உறங்குவது தெரியாமல் அவன் எனக்கு முன்னே போயிருக்கலாம்,' என்று நினைத்துத் தானும் போக ஆரம்பித்தான். வழியிலிருந்த ஊர்களில் ஒரு கிழவன் தனக்கு முன் அவ்வழியே சென்றானா என விசாரித்தான். அவ்வூரார்கள் தாங்கள் பார்க்கவில்லை என்று சொன்னார்கள். வழியிற் கண்டவர்களை எல்லாம் விசாரித்தான். ஒருவரும் ஆனந்தனைப் பார்த்ததாகச் சொல்லவில்லை.

## VII

பிரயாணிகள் திருப்பதி மலையின் அடிவாரத்தில் தங்கிப் பிறகு மலைமேலேறிச் செல்வது வழக்கம். அம்மலையடிவாரத்தி லாவது ஆனந்தனைக் கண்டு கொள்ளலாம் என்று பொன்னன் எண்ணினான்; மலையடிவாரத்தைச் சேர்ந்ததும், ஆனந்தனைத் தேடினான். ஆனந்தன் அகப்படவில்லை. அவ்விடம் தங்கியிருந்தவர்களை எல்லாம் விசாரித்தான். ஆனந்தன் போனவிடம் தெரியவில்லை. அங்கே ஒரு சந்நியாசியுடன் பொன்னன் சிநேகம் செய்துகொண்டான்.

அச்சந்நியாசி தனக்கு மலையின்மேல் ஏறப்பாதை நன்றாய்த் தெரியும் என்றும், தானும் திருப்பதிக்குப் போவதாகவும், அம்மலையிற் பார்க்கத்தக்கவைகளை எல்லாம் தான் பொன்னனுக்குக் காண்பிப்பதாகவும் சொன்னான். பொன்னன் தனக்கு நல்ல சமயத்தில் உதவி கிடைத்தது என்று சந்தோஷமடைந்தான்.

பொன்னனும் சந்நியாசியும் மறுநாட்காலையில் மலைமேல் ஏறத்தொடங்கினார்கள். பல இடங்களில் செங்குத்தான பாறைகள்மீது ஏறிச்செல்ல வேண்டியிருந்தது. பொன்னன் நடக்க முடியாமல், பல இடங்களிற் களைத்து உட்கார்ந்தான். சந்நியாசி அவன் கூடவேயிருந்து அவனுக்குத் தைரியம் சொல்லிக்கொண்டும், அவனை உற்சாகப்படுத்திக் கொண்டும் சென்றான். அவர்கள் இருவரும் கடைசியாக மலையின்மேலிருக்கிற கோவிலை அடைந்தார்கள். அவர்கள் போய்ச் சேர இரவில் நெடுநேரம் ஆய்விட்டதால், கோவில் பூட்டியாய் விட்டது. அன்று அவர்கள் கோவிலுக்குப் போக முடியவில்லை. சந்நியாசியும் பொன்னனும் ஒரு மடத்தில் இராத்திரியில் தங்கினார்கள்.

அடுத்தநாட் காலையில் சந்நியாசி தன்னிடமிருந்த பணத்தை இராத்திரி யாரோ திருடிவிட்டான் என்று சொல்லி வருத்தப்பட்டான். பொன்னன் சந்நியாசியிடம் பணமிருந்ததாகவாவது, பணம் திருட்டுப் போனதாகவாவது நம்பவில்லை. சந்நியாசி பொன்னனுடன் பழகிய வரையில் ஒரு காசு கூடச் செலவழித்ததைப் பொன்னன் பார்க்கவில்லை. பொன்னனே அவனுக்குச் சாப்பாடு முதலிய எல்லாவற்றுக்கும் செலவழித்து வந்தான். ஆகையால், அவன் தன்

னுடன் வந்தவன் உண்மைச் சந்நியாசி யல்லன் என்றெண்ணினான்.

சந்நியாசி, பொன்னனுக்கு அதிகம் செலவில்லாமல் அபிஷேகம் அர்ச்சனை முதலியவைகள் செய்விக்கத் தனக்கு ஒரு வழி தெரியும் என்று சொன்னான். அதற்குப் பொன்னன், "நான் கடவுள் பொருட்டுச் செலவழிக்கப் பின் வாங்கமாட்டேன்," என்று கூறினான். பொன்னன் முகக் குறிகளைக் கண்டு, தன்னைப் பொன்னன் சந்தேகிக்கிறான் என்று கண்டுகொண்டு, சந்நியாசி தான் உண்மையில் உலகத்தைத் துறந்தவன்போல நடித்தான். பொன்னன், 'ஒரு சமயம் இவன் உண்மைத் துறவியாக இருப்பனோ! நாம் இவனைப்பற்றிப் பாவமான எண்ணங்களைக் கொண்டோமே!' என்று வருத்தப்பட்டான். 'இத்துறவி எப்படியிருந்தால் நமக்கென்ன? இனி இவன் உதவி நமக்கு வேண்டுவதில்லை,' என்று அவனை விட்டு விலகிக் கொள்ள முயன்றான். சந்நியாசி பொன்னனை விடுவ்தாக இல்லை. பொன்னன் எவ்விடம் சென்றாலும், சந்நியாசியும் கூடவே செல்வான். சில நிமிஷங்கள் கூடப் பொன்னனைத் தனியே யிருக்க அவன் விடவில்லை. பொன்னனை விடாமற் சந்நியாசி சுற்றிக்கொண்டிருப்பதைக் கவனிக்கவே பொன்னனுக்குச் சந்தேகம் அதிகரித்தது.

## VIII

காலையில் ஸ்நானம் செய்து சுத்தமான உடைகள் உடுத்திக் கோவிலுக்குள் பொன்னனும் சந்நியாசியும் சென்றார்கள். அவர்கள் போவதற்கு முன் கோவிலுக்குள் ஜனங்கள் நிறைந்துவிட்டார்கள்.

அவர்கள் இருவரும் கோவிலுக்குள் செல்வதே பெரிய கஷ்டமாயிற்று. அவர்கள் கூட்டத்திற்குள் ஜனங்களைத் தள்ளிக்கொண்டு சிறிது தூரம் சென்றார்கள். அதற்குமேற் போக முடியவில்லை. அவ்வளவு நெருக்கத்திலும் சந்நியாசி பொன்னனைவிட்டுப் பிரியவில்லை. கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்ட பிறகு திரும்புவதற்குக் கூட முடியவில்லை. ஜனங்கள் ஒரு பக்கமிருந்து ஒரு பக்கம் ஒதுங்குகிறபோது பெருமாள் சேவை கொஞ்சம் கொஞ்சம் தெரிந்தது. கைகளை உயர்த்திப் பொன்னன் கும்பிடுமுன் தன்னை ஒட்டி நின்ற சந்நியாசியின் ஞாபகம் வந்தது. தன் மடியிலிருந்த பண முடிப்பு இருக்கிறதா என்று மடியைத்தொட்டுப்பார்த்தான். பொன்னனுக்கு இறைவனிடத்தில் மனம் பதியவில்லை. சற்றுக் கும்பிடுவதும், உடனே பண முடிப்பு இருக்கிறதா என்று மடியைத் தொட்டுப் பார்ப்பதுமாக இருந்தான்; தன்னுடன் நின்ற சந்நியாசி உண்மை பேசுபவனல்லன் என்றும், அவன் தன் பண முடிப்பை அவிழ்க்கவே தன்னை விடாமல் சுற்றிக்கொண்டிருக்கிறான் என்றும் அவன் சந்நியாசியைப் பற்றியே எப்போதும் எண்ணிக்கொண்டு இருந்தான்.

ஐயோ! அவன் அரிதில் தேடிய பொருளைச்செலவழித்து, எவ்வளவோ கஷ்டப்பட்டு, இறைவன் திருச் சந்நிதி முன் சேர்ந்தும், இறைவனைப்பற்றிக் கொஞ்சமும் நினைக்க முடியவில்லை. கூட்டம் சற்று விலகிற்று. அப்போது பொன்னன் எல்லோருக்கு முன்பு ஜன நெருக்கமில்லாத இடத்தில் தன் நண்பன் ஆனந்தன் ஆனந்தத்தோடு நிற்பதைக் கண்டான். ஆனந்தன் வழுக்கைத் தலை அவனுக்கு நன்

ருய்த் தெரிந்தது. பொன்னன், 'இவன் ஆனந்தனைப் போலவே யிருக்கிறான். இவன் எப்படி எனக்குமுன் இங்கே வந்திருக்க முடியும்? மலையடிவாரத்தில் வந்து தங்கிய ஒவ்வொருவரையும் நான் பார்த்தேனே! அவர்களில் ஆனந்தன் காணப்படவில்லையே! மலைமேலேறும்போதும் தென்படவில்லையே!' என்று இவ்விதம் நினைத்தபோது, அவ்வழுக்கைத் தலையன் கோவிலை விட்டுப் போவதற்குத் திரும்பினான். அவன் முகம் பொன்னனுக்கு நன்றாகத் தெரிந்தது. சந்தேகமில்லாமல், 'இவன் ஆனந்தனே,' என்று நிச்சயித்தான். 'இவன் எப்படி எல்லோருக்குமுன் இங்கே வந்திருக்க முடியும்!' என்று ஆச்சரியப்பட்டான். 'வழியில் ஏதாவது வண்டி கிடைத்து வேகமாக வந்திருக்கிறான் போலிருக்கிறது!' என்று நினைத்தான். 'இனி இச்சந்நியாசியான சனியனை விட்டு விலகிவிடலாம். நம் நண்பன் ஆனந்தன் கிடைத்துவிட்டான்,' என்று சந்தோஷமடைந்தான்; பின்பு ஆனந்தன் கூட்டத்தில் மறைந்துவிடுவான் என்று எண்ணி, அவனைப் பார்த்தபடியே நின்றான்.

தீப ஆராதனை சமயம், ஜனங்கள் ஒருவரை ஒருவர் தள்ளப் பொன்னனுக்கு நிற்பதற்கும் முடியவில்லை. ஆயினும், ஆனந்தனைப் பார்ப்பதை மாத்திரம் பொன்னன் மறக்கவில்லை. தீபாராதனை முடிந்தவுடன் ஆளுக்கொரு பக்கமாகக் கூட்டத்திலிருந்தவர்கள் தள்ள ஆரம்பித்தார்கள். பொன்னனுக்குப் பொறுக்க முடியவில்லை. அவன் சிறிது நேரத்தில் வெளியே தள்ளப்பட்டான்; ஒரு பக்கமாக நின்று கொண்டுபோகிறவர்களை எல்லாம் பார்த்துக்கொண்டு இருந்தான். ஆனந்தனைக் காணமுடியவில்லை.

தான் பட்ட கஷ்டத்தால், அதுவரையில்பொன்னன் பண முடிப்பை மறந்திருந்தான். தன் பக்கத்தில் எப்போதும் இருக்கும் சந்நியாசி காணப்படவில்லை. பணமுடிப்பைப் பார்த்தான். அதுவும் சென்றவிடம் தெரியவில்லை. அவனுக்கு வியப்பும் பெருந்துக்கமும் உண்டாயின. பிறகு, அவன் தான் தங்கியிருந்த மடத்திற்குப் போனான். அன்றிரவு சந்நியாசியின் பயமின்றித் தூங்கினான்.

பொன்னன் முன் யோசனையுடையவன். தான் திரும்பிப் போவதற்கு வேண்டிய பணத்தை எடுத்துத் தனியாக முடிந்து வைத்திருந்தான், சந்நியாசிக்கு இதைத் தெரிந்துகொள்ளக் கூடிய அறிவில்லை. அவனுக்கு அகப்பட்டது ஒரு முடிப்பே. தன் பணத்தில் பெரும்பாகம் திருட்டுப்போய்விட்டதால், தான் நினைத்தபடி கடவுளுக்கு அபிஷேகம் முதலியன செய்ய அவனால்முடியவில்லை. எஞ்சியபணத்திலிருந்து சொற்பமாக ஓர் அர்ச்சனையாவது செய்ய வேண்டுமென்று மறு நாள் கோவிலுக்குச் சென்றான். அப்போதும் கூட்டம் அதிகமாகவே இருந்தது. தான் பெருமாள் உருவத்திற்கு வெகு தூரத்திலேயே நிற்க நேர்ந்தது.

அர்ச்சனை நடந்தது. பொன்னனுக்கு முன்பு திருட்டுக் கொடுத்த ஞாபகம் வந்தது. தன் பண முடிப்பைத் தொட்டுப் பார்த்தான். 'முன்போல இந்தப் பணமும் திருட்டுப் போய்விட்டால், நாம் எப்படி ஊருக்குத் திரும்பிப் போவது?' என்று நினைத்தான். பொன்னன் அதுவரையில் தன் அஜாக்கிரதையால் பணத்தை இழந்தவனல்லன். 'நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தும், நாம் கொண்டு

வந்திருந்த பணத்திற் பெரும் பாகத்தை இழக்க நேர்ந்ததே!' என்று வருத்தப்பட்டான். தீப ஆராதனை சமயம் அக்கம் பக்கங்களில் நின்றவர்களைப் பார்த்துக்கொண்டே பண முடிப்பைப் பற்றியிருந்த தன் கைகளை உயர்த்திக் கடவுளைக் கும்பிட்டு விட்டு, உடனே பண முடிப்பை மறுபடியும் கைகளால் பற்றிக்கொண்டே பெருமான் திரு உருவத்தை நோக்கினன்; அப்போது அங்கிருந்த எல்லோருக்கும் முன்னால் ஆனந்தன் நிற்பதைக் கண்டான்; "இறைவர் திரு வுருவத்தின் சமீபத்தில் அர்ச்சகர்கள் இவனைப் போக விடமாட்டார்களே! இவன் அங்கு எப்படிப் போனன்? இவன் ஆனந்த னல்லன்போலிருக்கிறதே!' என்று எண்ணி, உற்று உற்றுப் பார்த்தான். ஆனந்தன் முகம் நன்ருகத் தெரிந்தது. 'இம்முறை ஆனந்தனை எப்படியாவது பிடித்துவிட வேண்டும்,' என்று தான் நின்ற இடத்திலிருந்து முன் நகர்ந்து மூலஸ்தானத்தின் வாயிற்படியிற் போய் நின்று கொண்டான். ஆனந்தன் அதற்குள் மறைந்து விட்டான்.

மூன்ரும் நாளும் இறைவனை வணங்கப் பொன்னன் கோவிலுக்குச் சென்ருன். அம்முறையும் ஆனந்தனை இறைவன் திருவுருவின் சமீபத்திற் கண்டான். இறைவன் அன்பில் ஈடுபட்டு மெய்ம்மறந்து மேல் நோக்கிய கண்களுடன் ஆனந்தன் நிற்பதை நன்ருகப் பார்த்தான். 'இம்முறை எப்படியாவது இவனை விடாமல் பிடிக்க வேண்டும்', என்று எண்ணி, எல்லோருக்கும் முன்னே போய் வெளி வாயிற்படியில் நின்றுகொண்டு, பகல் வரையில் காத்திருந்தான். திடீரென்று ஆனந்தன் காணப்படவில்லை. பின்பு

அவன் அம்மலையில் தங்கியிருந்த ஒவ்வொருவரிடமும் சென்று, ஆனந்தனைப் பற்றி விசாரித்தான். ஆனந்தன் சென்ற இடத்தை ஒருவராலும் குறிப்பிட இயலவில்லை.

சில நாள் திருப்பதியில் பொன்னன் தங்கியிருந்து தன் நண்பர்களுக்களிக்கத் திருமண் வாங்கிக்கொண்டு, தன் ஊருக்குத் புறப்பட்டான்.

## IX

பொன்னன் தான் முன்பு வந்த வழியே திரும்பிச் சென்றான். பஞ்சத்தால் வருந்திய நாடுகளெல்லாம் மழை பெய்து செழிப்படைந்திருந்தன. திருப்பதி மலையில் இருந்தபோது தன் வீட்டுக் கவலைகளைப் பொன்னன் மறந்திருந்தான். மலையை விட்டு இறங்கவே, பொன்னனுக்கு வீட்டின் ஞாபகம் வந்தது. "இந்தவருஷம் நன்றாக மழை பெய்திருக்கிறது. நம் மக்கள் நிலத்தை நன்றாக காலத்தில் உழுதார்களோ, இல்லையோ! வீட்டை எப்படிக் கட்டினார்களோ! வீட்டை இடிப்பது என்றால் சுலபம். கட்டுவது சாமானியமா?" என்று பல விதமாகக் கவலைப்பட்டுக்கொண்டே போனான்.

ஒரு நாள் மாலைப் பொழுதில் தான் ஆனந்தனை விட்டுப் பிரிந்த இடத்திற்குச் சமீபத்தில் வந்ததும், ஆனந்தன் தன்னை விட்டுப் பிரிந்த ஞாபகம் வந்தது. அந்த இடத்தில் நின்று அந்தப் பக்கத்தில் தேடிப் பார்த்தான். ஒரு பெண் குழந்தை ஓடி வந்து, "தாதா, தாதா, எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டுப் போங்கள்," என்று கூப்பிட்டது. பொன்னன் அதைக் கவனியாமல் போனான். அக்குழந்தை பொன்

னன் வேஷ்டியைப் பிடித்து வீட்டிற் கிழுத்தது. அக் குழந்தையுடனிருந்த ஒரு பெண்ணும், தன் வீட்டிற்கு வந்து போகும்படி அவனை வேண்டினாள்.

அவன் அவர்கள் வீட்டைச் சேர்ந்ததும், 'இந்த ஊரில்தானே தண்ணீர் சாப்பிட ஆனந்தன் போனான்! இங்கே அவனைப் பற்றி விசாரிக்க வேண்டும்,' என்று நினைத்தான்.

அவ்வீட்டில் பொன்னனுக்குச் செய்த உபசாரத்துக் களவில்லை. பொன்னன் அவன் தலையிலிருந்த மூட்டையை இறக்கு முன்னமே ஒரு கிழவி ஓடி வந்து அதை இறக்கினாள்; கால்கழுவத் தண்ணீர் கொடுத்தாள்; திண்ணையிலிருக்கச் செய்து, சாப்பிடப் பாலும் பழமும் கொடுத்தாள். "அன்னியனாகிய எனக்கு நீங்கள் இவ்வளவு உபசாரம் செய்வதற்கு நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்," என்று பொன்னன் சொன்னான்.

அதைக் கேட்டு அந்த வீட்டிலிருந்த பெண்பிள்ளை, "அன்னியர்களானால் என்ன? அன்னியர் ஒருவராலேயே நாங்கள் காப்பாற்றப்பட்டோம். நாங்கள் தெய்வ சிந்தையின்றி நாங்கள் சாப்பிடுவதையே பெரிதாகக் கருதிப் பிறருக்கு ஒன்றும் ஈயாமல் வாழ்ந்து வந்தோம். கடவுள் அதற்காக எங்களைத் தண்டித்தார். எல்லோரும் சாகும் தருணத்திலிருந்தபோது ஒரு கிழவனார் வந்து, எங்களுக்கு உணவு அளித்து, எங்களுக்கு வேண்டியவற்றைச் செய்து, காப்பாற்றினார்," என்று சொல்லி முடிக்கு முன் வீட்டிற்குள் சென்றிருந்த கிழவி, இதைக் கேட்டுக்கொண்டு வந்து, அவளைத் தடுத்து, 'நன்றாகச் சொன்னாய்! கிழவரா அவர்? எங்கள்

தெய்வமே கிழவனார் வடிவாக வந்து எங்களைக் காப்பாற்றினது! எங்களிடத்தில் அவர் எவ்வளவு அன்பும் அருளும் காண்பித்தார்! அவர் வராவிட்டால் எங்கள் குடும்பமே இருந்த இடம் தெரியாமற் போயிருக்கும். ஐயோ! அவர் தாம் யார் என்பதையும் தம் இருப்பிடம் எந்த ஊர் என்பதையும் சொல்லாமற் போய்விட்டாரே! ஆறு மாதத்திற்கு முன்னே அவர் வந்தார். அவருக்குத் தலை வழுக்கையாக இருந்தது. இன்னும் நன்றாக அஃது எனக்கு நினைப்பிருக்கிறது. மூட்டையைத் திண்ணையில் இறக்கி வைத்துத் தண்ணீர் கேட்டார். பாவி தண்ணீர் இல்லை என்று வெறுப்பாகக் கூறினேன்!'' என்று சொல்லும்போது, அங்கே அதைக் கேட்டுக் கொண்டிருந்த சிறு பெண், "அவர் மூட்டையை உள்ளே இறக்கி வைத்தார்; திண்ணையிலிறக்கவில்லை,'' என்றாள்.

அவர்கள் கிழவன் செய்த செய்கைகளையும், அவன் சொல்லிய வார்த்தைகளையும் புகழ்ந்து புகழ்ந்து பேசினார்கள். இரவானவுடன் கிழவியின் மகனும் வயலிலிருந்து வீடு வந்து சேர்ந்தான். அவன் கிழவனைப் புகழ்ந்ததற்கு அளவில்லை. அவன், 'நாங்கள் ஈகையற்று அன்பின்றி மிருகங்களைப் போன்று வாழ்ந்தோம். அன்பில்லாத எங்களுக்கு அன்பைக் காட்டி, எங்களை மானிடராக்கியவர் அப்பெரியவரே,'' என்று அக்கிழவனைப் பற்றிப் பேசும்போதெல்லாம் அவனை நினைத்துக் கும்பிட்டான். பொன்னனுக்கு அவர்கள் அன்று இராத்திரி நல்ல விருந்து செய்தார்கள். பொன்னன் மகிழ்ச்சியுடன் விருந்துண்டு, உறங்கப் படுத்தான். அவனுக்கு நித்திரை வரவில்லை.

அவர்கள் புகழ்ந்து கூறியவையெல்லாம் ஆனந்தனைப் பற்றியே என்பது அவனுக்கு நிச்சயமாகத் தோன்றினது. தான் திருப்பதியில் இறைவன் திருவுருவின் சமீபத்தில் மூன்று முறை ஆனந்தனைக் கண்டதையும், அவன் மூன்று முறையும் மறைந்து போனதையும் நினைத்தான். "ஆஹா! கடவுள் அவன் செய்த பணிகளை ஏற்றுக்கொண்டார் என்பது நிச்சயம். நாம் செய்த யாத்திரையையும் அர்ச்சனையையும் அவர் ஏற்றுக்கொள்ளுவாரோ!" என்று தனக்குள் ஆலோசித்தான்; பிறகு தன்னை மறந்து தூங்கிவிட்டான்.

காலையில் எழுந்து, அவ்வீட்டில் எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு, பொன்னன் ஊருக்குப் புறப்பட்டான். அவர்கள் பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களை மனமுவந்து அளித்துப் பொன்னனை வழியனுப்பினார்கள்.

## X

பொன்னன் தன் குடும்ப விஷயங்களை நினைத்துக்கொண்டே தன் வீடு வந்து சேர்ந்தான். அவன் மூத்த மகன் வீட்டிலில்லை. சமீபத்திலிருந்த பட்டணத்தில் ஒரு தாசிவீட்டில் ஒரு மாதமாக இருப்பதாகத் தெரிந்துகொண்டான். இளைய மகன் குடிபோதையுடன் இருந்தான். ஒரு வேலையும் சரியாகச் செய்யப்படவில்லை. நிலங்கள் பாழாய்க் கிடந்தன. மாடுகள் மெலிந்து போயிருந்தன. தான் அரிதில் தேடிய பொருளை எல்லாம் தன் மக்கள் வீண் செலவு செய்துவிட்டார்கள் என்பது அவனுக்குத்தெளிவாக விளங்கிற்று. 'இப்படிச் செய்யலாமா?' என்று தன் இளைய மகனைக் கண்டித்தான்; திட்டினான். கிழவன்

பேசுவதைக் கேட்டுப் பையன் கோபத்துடன், "உன்னையார் திருப்பதி யாத்திரைக்குப் போகச் சொன்னவன்? நீ வீட்டிலேயே இருந்து எல்லா விஷயங்களையும் பார்த்துக்கொள்ளுகிறதுதானே! வீட்டில் இருந்த பணத்தை எல்லாம் எடுத்துப் போய்ச் செலவழித்தது மல்லாமல், எங்கள்மீது ஏன் குற்றம் சொல்லுகிறாய்! நீ செலவழித்த பணத்திற்கு என்ன இலாபம் வந்தது?" என்று கேட்டான்.

பொன்னனுக்குத் தாங்கமுடியாத கோபம் வந்தது. அவன் தன் மகனை ஓர் அடி கையால்அடித்தான். உடனே அவன் மகன் சமீபத்திலிருந்த ஒரு கம்பை எடுத்துக் கிழவனைப் பலமாக அடித்துவிட்டான். பொன்னனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. அடியைப் பெற்றுக்கொண்டு, கீழே உட்கார்ந்தான். அதற்குள் அவன் மனைவி வந்து பொன்னனைத் திட்ட ஆரம்பித்தாள். "கிழவனுக்குத் திருப்பதிக்குப் போனதால் புத்தி வளர்ந்துவிட்டது. வயதான பிள்ளையைக் கைநீட்டி அடிக்கலாமா? தன் மரியாதையைத் தான் காப்பாற்றிக்கொள்ள வேண்டாவா? காலத்துக்குத் தக்கபடி நடக்க வேண்டாவா? கிழப் பிணமே, பணத்தைச் சம்பாதித்து உன் தலையில் கட்டிக்கொண்டுபோகப் போகிறாயா? உனக்குப் பிறகு அவர்கள்தானே உன் சொத்தை அடைகிறவர்கள்? உனக்கு எப்போதுதான் புத்தி வருமோ!" என்று பல விதமாகத் திட்டினாள்.

பொன்னனுக்கு வீட்டிலிருக்கப் பிடிக்கவில்லை. ஆகையால், அவன் தன்னை அடித்தவனைச் சும்மா விடக் கூடாது என்று கிராம முனிசீப்பிடம் பிராது கொடுப்பதற்காக விரைந்து சென்றான்.

கிராம முனிசீப்பு வீட்டிற்கு ஆனந்தன் வீட்டைக் கடந்துபோக வேண்டியிருந்தது. அவன் வீட்டின் வாயிலில் நின்று, அவன் மனைவி பொன்னனை ஆவலுடன், 'எப்போது வந்தீர்கள் ?' என்று வினவினாள். பொன்னன், 'இன்றுதான் வந்தேன்,' என்று சொல்லிவிட்டுப் போக எத்தனித்தான். கிழவி விடவில்லை; தன் வீட்டிற்கு வந்துவிட்டுப் போகும்படி வேண்டினாள். பொன்னனுக்கு அதை மறுக்க முடியவில்லை. அவன் அவள் வீட்டின் திண்ணையில் உட்கார்ந்து, 'ஆனந்தன் சுகமா ?' என்று கேட்டான். "அவர் முன்னையே வந்துவிட்டாரே! அவர் இல்லாமல் எங்கள் வீடு மங்களமாகவே யில்லை. கடவுள் அவரைத் திருப்பி அனுப்பினாரே என்று நாங்கள் சந்தோஷப்பட்டோம். என் மகனுக்கு அவர் வந்ததும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. 'அவர் இல்லாவிட்டால், என்ன குடித்தனம் ?' என்று என் மகன் சொல்கிறான். அவர் வந்ததிலிருந்து அவருக்குக் கொஞ்சம் புத்தி மாராட்டமாக இருக்கிறது. வயதாயிற்று! நாங்கள் என்ன செய்வோம்! அவராகச் சிரிப்பார். அவராக அழுவார். யாரையாவது கண்டால் நிறுத்திவிடுகிறார்,' என்று மூச்சு விடாமல் பேசினாள் கிழவி.

பொன்னன், "ஆனந்தன் வீட்டி லில்லையோ ?" என்று கேட்க, அவள், "கொல்லைப்புறம் வேலை செய்துகொண்டிருக்கிறார்," என்று சொல்லிவிட்டு, ஓடிப்போய் ஆனந்தனைக் கூட்டி வந்தாள்.

ஆனந்தன் பொன்னனைக் கட்டித் தழுவிக் கொண்டான்; "திருப்பதிக்குச் சென்றாயா ? நம்

பெருமாளைக் கண்ணாரக் கண்டாயா? எனக்கு அந்தப் பிராப்தமில்லை," என்று கூறி விசனித்தான்.

பொன்னன், "நான் திருப்பதிக்குப் போனேன். உனக்குத் தீர்த்தமும் திருமண்ணும் கொண்டுவந்திருக்கிறேன். ஆனால், என் யாத்திரையைக் கடவுள் ஒப்புக் கொண்டாரோ என்பதுதான் சந்தேகம்!" என்றான்.

ஆனந்தன், "கடவுள் உன்னைக் கைவிடமாட்டார். திருப்பதி யாத்திரைக்குப் புண்ணியம் இல்லாமற் போகுமா? நீ புண்ணியம் செய்தவன்தான்," என்று கூறினான்.

பொன்னன், "நானா யாத்திரை செய்தேன்? என் உடல் செய்தது. என் மனம் எங்கே போனதோ! என் ஆத்துமா எங்கே போனதோ! உன் உயிர் அங்கே யிருந்தது. என் உடல் இங்கே யிருந்தது. உன்னை நான் அங்கே கண்டேன். உன் பணிகளையே கடவுள் ஒப்புக்கொண்டார்," என்று சொல்லுமுன் ஆனந்தன் அவனைத் தடுத்து, "இது கடவுள் விஷயம்; பேசக்கூடாது," என்று கூறினான். "சீ! என்று தள்ளாது என் செய்பணிகள் கொண்டேற்றாய்? என் தாயினும் தயவுடையாய்," என்று மனத்தில் ஆனந்தன் நினைத்தான். கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது.

பொன்னன், "மறுபடியும், நீ தங்கியிருந்த வீட்டிற்கு வந்தேன்," என்று தொடங்கு முன், ஆனந்தன், "அப்பா, அது கடவுள் விஷயம். வாயாற் பேசக்கூடாது; வா," என்று உள்ளே அழைத்துக் கொண்டுபோய், அவன் பேச்சை மாற்றிவிட்டான்.

# 2. ஆசைக்கும் உண்டோ அளவு?

I

அளகாபுரி என்கிற பட்டினத்தில் செல்லம், தனம் என்ற இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். அவர்களில் செல்லம் மூத்தவள்; தனம் இளையவள். செல்லத்தைப் பட்டினத்தில் ஒரு வியாபாரிக்குக் கலியாணம் செய்து கொடுத்திருந்தது. தனம் ஒரு சிறு கிராமத்தில் ஓர் ஏழைக் குடியானவனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தாள்.

ஒரு நாள் செல்லம் தன் சகோதரியைப் பார்க்கக் கிராமத்திற்கு வந்திருந்தாள். தன் சகோதரி ஒரு சிறு வீட்டில் வசித்து வந்ததையும், அவளுடைய ஏழ்மைத் தன்மையையும் பார்த்துச் செல்லம் எந்நேரமும் தன் தங்கையிடம் தன்னுடைய வாழ்வைப் பற்றிப் புகழ்ந்தாள்; தன் வீடு மிகவும் விசாலமானதென்றும், தான் எந்நாளும் அழகான உடைகளே தரிப்பது வழக்கம் என்றும், மேன்மையான ஆகாரங்களே புசிப்பதென்றும் ஓயாமல் தன்னைப் புகழ்ந்து கொண்டாள். இவற்றைக் கேட்ட இளையவள், செல்லத்தின் வாழ்வைத் தாழ்த்தியே பேசினாள். ஒரு நாள் இரவு செல்லமும் தனமும் சாப்பிட உட்கார்ந்தார்கள். அப்பொழுது அவர்கள் பின்னே வருமாறு சம்பாஷித்துக்கொண்டே சாப்பிட்டார்கள்.

**தனம் :**—அக்கா, நீ என்ன சொல்லிப் புகழ்ந்தாலும், நாங்கள் எங்கள் கிராமத்தை விட்டு வரமாட்

டோம். உங்கள் வாழ்வைப்போன்ற வாழ்வு எங்களுக்கு வேண்டுவதில்லை. நாங்கள் ஏழைகள் தாம். ஆனால், நாங்கள் பயமே யில்லாமல் சுகமாக வாழ்கிறோம். நீங்கள் பணக்காரர்கள். உங்களுக்கு ஏராளமான வருமானம் வரும்; அதுபோலவே நஷ்டமும் வரும். எங்களுக்கு இலாபமுமில்லை; நஷ்டமுமில்லை. அதிக வரவு மில்லை; அதிக செலவு மில்லை. இன்று நீங்கள் கோடீஸ்வரராக இருக்கிறீர்கள்; நாளை பிச்சை எடுக்க நேர்ந்தாலும் நேரும். உங்கள் வாழ்வைப் போல எங்கள் வாழ்வு நிச்சய மற்றதன்று. நாங்கள் பாடு பட்டால், நிச்சயம் கூலியுண்டு. பூமியில் உழைப்பதற்கு ஒரு நாளும் தாழ்வில்லை; மாறுதலு மில்லை. உங்களைப் போலச் சரிந்த தொந்தியும் வீங்கிய கன்னமும் நாங்கள் பெற முடியாது என்பது உண்மை. எங்களுக்கு ஒட்டிய வயிறும் வற்றிய கன்னமுமே என்றும் உள்ளவை. நாங்கள் உங்களைப் போல் பணக்காரராக முடியாது. ஆனால் எங்களுக்குப் போதுமானது என்றும் கிடைக்கும்.

செல்லம்:—போதும்; போதும். உனக்குப் போதுமானது எப்போதும் கிடைக்கும். போதுமான சாணியும் குப்பையும் கூளமும் கிடைக்கும். மக்களுக்கு நாகரிகம் வேண்டாவா? உன் புருஷர் என்ன பாடு பட்டாலும், நீங்கள் சாவது சாணியிலும் செத்தையிலுந்தானே! உங்களைப் போலத் தான் உங்கள் பிள்ளைகளும் இருப்பார்கள்.

தனம்:—சாணியானல் என்ன, செத்தையானல் என்ன? நாங்கள் எவருக்கும் கடன் கொடுக்க வேண்டுவதில்லை; ஒருவரைப்பற்றிப் பயப்பட வேண்டுவதுமில்லை. இன்று நீங்கள் சௌக்கியமாக இருக்கிறீர்

கள். நாளைக்குக் கஷ்ட காலம் வந்துவிட்டால் தெரியும். பட்டின வாசத்தில் ஒருவன் கெட்டுப் போவதற்கு வழிகள் அநேகம் உண்டு. சூது, குடி முதலியவைகளில் ஒன்று உன் கணவர் முகம் பார்த்துவிட்டால், நாளையே நீங்கள் ஒட்டாண்டிகள்தாம்.

இப்படிப் பேசிக்கொண்டே அவர்கள் சாப்பிட்டு முடித்தார்கள். பிறகு, "இந்தச் சேலை நாகரிகமானது அன்று. அந்த நகையை நாகரிகமுள்ள மனிதர் ஒருவரும் இப்போது போடுகிறதில்லை," என்று உடைகளையும் நகைகளையும் பற்றிப் பேசிவிட்டு, அவர்கள் நித்திரை போனார்கள்.

தனத்தின் புருஷன் பாக்கியம், நிலங்களை வாரத்திற்கு உழுது சாகுபடி செய்து ஜீவித்து வருகிற குடியானவன். அவன், இரண்டு சகோதரிகளும் பேசியவைகளைத் திண்ணையில் படுத்திருந்தபடி கேட்டுக்கொண்டேயிருந்தான். அவனுக்கு அன்று வெகு நேரம் வரையில் தூக்கம் வரவில்லை. "என்ன பாடு பட்டு என்ன செய்கிறது! பூமி கொடுக்கிறதைத்தான் கொடுக்கும். அதிகம் எப்படிக் கிடைக்கும்? என்ன பாடு பட்டுச் சாகுபடி செய்தாலும், நம் வயிறு வளர்ப்பதே கஷ்டமாக இருக்கிறது. இதில் நகை எப்படிச் செய்கிறது? உடைகள் எப்படி வாங்குகிறது? இன்னும் கொஞ்சம் நிலம் சாகுபடிக்குக் கிடைத்தால், ஏதாவது மீதியாகும். நிலம் கிடைப்பதுதான் கஷ்டமாக இருக்கிறது," என்றும், இன்னும் பலவிதமாகவும் நினைத்துக்கொண்டே தூங்கி விட்டான். இந்த எண்ணங்கள் பாக்கியத்திற்கு உண்டாகவே, சனி வியாபாரியை விட்டு, குடியானவனையே பிடிக்கத் தொடங்கியது.

## II

அந்த ஊரில் ஒரு பெண் பிள்ளைக்கு 300 ஏக்கர் நிலமிருந்தது. பாக்கியம் கொஞ்சம் சாகுபடி செய்து வந்தான். அந்தப் பெண் பிள்ளை புருஷன் இறந்து போனதால், தானே தன் நஞ்சை புஞ்சை நிலங்களைப் பார்த்து வந்தாள்.

அவள் தன் நிலங்களை விற்கப் போவதாகவும், அடுத்த ஊர் முதலியார் ஒருவர் வாங்கப்போவதாகவும் ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். முதலியார் அந்த நிலங்களை வாங்கிவிட்டால், குடியானவர்கள் எல்லாம் வேறு நிலங்கள் தேடவேண்டுவது தான்; அவரிடம் ஒருவரும் சாகுபடி செய்ய முடியாது. பெண் பிள்ளையினிடம் நிலமிருந்த வரையில், குடியானவர்கள் பல சௌகரியங்களை அடைந்து வந்தார்கள். அந்த அம்மாள் எவ்வளவோ இரக்க முடையவள். அவள் குடியானவர்களை ஒரு நாளும் வருத்தியதில்லை. அவள் அவர்களுக்கு ஏற்படுந்துன்பங்களைத் தனக்கு ஏற்பட்டனவாகக் கருதுவாள். முதலியாரோ, அவளுக்கு முற்றும் மாறானவர்; குடியானவர்களை வருத்தி, அவர்கள் காலக்ஷேபத்துக்குக் கூடத் தானியம் இல்லாதபடி வட்டிக் கணக்குப் போட்டுத் தானியத்தைப் பறிப்பதில் பெயர் போனவர். அவர் விதவையின் நிலத்தை வாங்கப் போவதாகக் கேட்டதும், குடியானவர் எல்லோரும் திடுக்கிட்டு, கூட்டம் கூடி, யோசனை செய்தனர். நிலத்திற்குரிய பெண் பிள்ளையிடம் சென்று தாங்கள் எல்லோரும் ஒன்று கூடி முதலியார் கொடுக்கிற விலையைக்காட்டிலும் அதிகம் கொடுப்பதாகவும், நிலங்கள் முழுவதும் தங்களுக்கே விற்க வேண்டு மென்றும் மிக வேண்டிக்

கொண்டார்கள். அந்த அம்மாள் அதற்கு இணங்கி, முதலியார் கேட்ட விலைக்கே நிலங்களைத் தன் குடிகளுக்கு விற்பதாக ஒப்புக்கொண்டாள். குடியானவர்கள் ஒன்று கூடிப் பணம் கொடுக்க வேண்டியதற்கு முயற்சி செய்தார்கள். பணம் கிடைக்கவில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்கு வாங்கக் கூடிய அளவு நிலத்தை வாங்கிக்கொள்வதாக ஏற்பாடு செய்தார்கள். அதற்கும் அந்த அம்மாள் சம்மதித்தாள். முழுத்தொகையையும் செலுத்தாவிட்டாலும், பாதித் தொகையைச் செலுத்திச் சில வருஷங்களில் பாக்கியுள்ள தொகையைக் கொடுப்பதாக எழுதி வாங்கிக் கொண்டு, சில குடியானவர்களுக்குக் கொஞ்சம் நிலத்தை விற்றாள்.

இதைப் பாக்கியம் கேள்விப்பட்டுத் தன் மனைவியோடு ஆலோசித்தான்: "எல்லோரும் நிலம் வாங்குகின்றனர். நாம் ஓர் ஏக்கர் நஞ்சை, நாலைந்து ஏக்கர் புஞ்சை யாவது வாங்க வேண்டும். முதலியாரிடமாவது வேறே யாரிடமாவது இனிச் சாகுபடி செய்ய முடியாது," என்று முடிவாகக் கூறினான்.

அவன் மனைவியும், நிலம் வாங்குவதற்குச் சம்மதித்தாள். ஆனால், அவர்கள் பணத்திற்கு என்ன செய்வதென்று மயங்கினார்கள். தனம், தான் நூறு ரூபாய் சேர்த்து வைத்திருப்பதாகவும், அதைத் தருவதாகவும் சொன்னாள்.

இதைக் கேட்டு பாக்கியம் நிலம் வாங்கிவிட்டதாகவே சந்தோஷப்பட்டான். தன் மூத்த மகனை ஒருவரிடம் பண்ணைக்கு விட்டு ஐம்பது ரூபாய் வாங்கினான்; தன்னிடமிருந்த தானியங்களையும் ஆடு மாடுகளிற் சிலவற்றையும் விற்று, ஐம்பது ரூபாய் சேகரித்

தான். இந்த இரு நூறு ரூபாயையும் கொண்டு போய்க் கொடுத்துப் பாக்கி மூந்நூறு ரூபாயையும் இரண்டு வருஷத்தில் கொடுப்பதாகப் பத்திரம் எழுதிக் கொடுத்து, ஓர் ஏக்கர் நஞ்சையும், நான்கு ஏக்கர் புஞ்சையும் வாங்கினான். தான் வாங்கிய நிலத்தில் ஒரு குடிசை கட்டி அங்கேயே தன் குடும்பத்தோடு குடியேறினான்.

இரவும் பகலும் அவனும் அவன் மனைவி மக்களும் அந்த நிலத்தில் பாடு பட்டார்கள். முதல் வருஷத்திலேயே நல்ல பலன் கிடைத்தது. நிலத்திற்குக் கொடுக்கவேண்டிய பாக்கித் தொகையை ஒரு வருஷத்தில் செலுத்திவிட்டான். பாக்கியம் முன்போல இல்லாமல், கொஞ்சம் பணக்காரனாகி விட்டான். அவன் மனைவி தன்னை அப்போது தன் சகோதரி செல்லம் வந்து பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டாள்.

## III

பாக்கியம் சந்தோஷமாகச் சில காலம் வாழ்ந்து வந்தான். இதர குடியானவர்கள் அவனுக்கு இடையூறு செய்யாமலிருந்தால், எவ்வளவோ சுகமாக வாழ்ந்திருப்பான். அவர்கள் ஆடு மாடுகளை அடிக்கடி பாக்கியத்தின் நிலத்தில் விட்டுவிடுவார்கள். பாக்கியம் எத்தனையோ தரம் அவர்களை எச்சரித்தான்; எத்தனையோமுறை அவர்களை மன்னித்தான்; எத்தனையோ தடவை பொறுத்துக்கொண்டு ஒன்றும் பேசாமலேயிருந்தான். நாளுக்கு நாள் ஆடு மாடுகள் அவன் நிலத்தில் அதிகமாக நுழைய ஆரம்பித்தன. வேண்டுமென்று அவர்கள் ஆடு மாடுகளை விடவில்லை என்பதும் பாக்கியத்திற்குத் தெரிந்தது

தான். ஆனால், அவன் எவ்வளவுதான் பொறுப்பான்? இவைகளைப்பற்றிக் கோர்ட்டில் பிராது கொடுக்க ஆரம்பித்தான்; அப்படிச் செய்தால்தான் அவர்களுக்குப் புத்திவரும் என்று நினைத்தான். ஒரு பிராதோடு நிற்காமல், பல பிராதுகள் கொடுக்க நேர்ந்தது. கோர்ட்டில் எத்தனையோ குடியானவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அவர்களுக்குக் கோப முண்டாகி, அதிலிருந்து பாக்கியத்தை வேண்டு மென்றே அவர்கள் கெடுக்க ஆரம்பித்தார்கள். அவன் நிலத்திலிருந்த மாமரம் தென்னைமரங்களிலுள்ள பலன்கள் இராத்திரியில் காணமற் போவது வழக்கமாயிற்று. நெல் முதலிய தானியங்களும் பாக்கியம் சேகரிக்குமுன்னே திருட்டுப்போய் விடும். அரும்பாடு பட்டு வளர்த்த மரங்கள் செடிகள் எல்லாம் தொலைந்தன. பாக்கியத்திற்கு ஆத்திரம் அடக்க முடியவில்லை. திருடனைப் பிடிக்க முயன்றும், பிரயோசனப்படவில்லை. 'இப்படிச் செய்பவன் யாராக இருக்கலாம்!' என்று பாக்கியம் நினைத்து நினைத்துப் பார்த்தான். ஒன்றும் நிச்சயமாகத் தோன்றவில்லை. வெட்டுபட்ட மரங்கள் கிடைக்குமென்று, தான் சந்தேகப்பட்ட சின்னான் என்றவன் வீட்டிற்குப்போனான். அவன் வீட்டில் ஒன்றும் அகப்படவில்லை; அவனோடு சண்டை பிடித்ததுதான் இலாபமாயிற்று. அவன்மேல் இரண்டு மூன்று தரம் பிராது கொடுத்தான். பாக்கியத்தின் பக்கம் சாக்ஷியம் சொல்லச் சாக்ஷிகள் இல்லை. நியாயாதிபதிக்கும், பாக்கியத்திற்குக் கிராமத்தார் செய்த அக்கிரமங்கள் எட்டின. அவர் என்ன செய்ய முடியும்? ருஜுவில்லாமல் பாக்கியம்

கொண்டு வந்த வழக்குகள் எல்லாம் தள்ளுபடியாயின. பாக்கியம் நியாயாதிபதிகளையும் பகைத்துக்கொண்டான்; நீதிபதிகள் இலஞ்சம் வாங்கிக் கொண்டு வழக்குகளை விட்டுவிட்டதாக மனுப் போட்டான்.

வழக்குகள் தள்ளுபடியாகவே, பாக்கியத்திற்குத் தொந்தரவு அதிகரித்தது. அவன் வெளியே புறப்படக் கூட முடியவில்லை. என்ன செய்வான் பாவம்! அவன் நிலைமை மிகவும் பரிதாபப்படத் தக்கதாக இருந்தது.

அப்போது அடுத்த ஜில்லாவில், சர்க்காரில் புதிய நிலங்கள் ஏலம் போடுவதாகவும், குறைந்த விலைக்கு நிலங்கள் கிடைப்பதாகவும் குடியானவர்கள் பேசிக்கொண்டார்கள். திடீரென்று அவ்விடம் போகப் பாக்கியத்திற்கு மனம் துணியவில்லை. 'அவ்விடம் நிலங்கள் செழிப்பானவைகளோ, அல்லவோ; அவ்வூரார்கள் நல்லவர்களோ, அல்லவோ,' என்று சந்தேகப்பட்டுக்கொண்டே யிருந்தான். "கிராமத்தில் உள்ள மற்ற எல்லோரும் அவ்விடம் போய்விட மாட்டார்களா! நாம் சௌக்கியமாக இருக்கலாமே!" என்று நினைத்துக்கொண்டு மிருந்தான்.

அப்படி நிலங்கள் விற்கப்படும் ஊரிலிருந்து ஒரு வியாபாரி தற்செயலாகப் பாக்கியம் இருந்த ஊருக்கு வந்தான். பாக்கியம் அவனுக்குச் சாப்பாடு போட்டுத் தன் வீட்டில் அவனை இருக்கச்செய்து, நிலங்களைப் பற்றி விசாரித்தான். நிலங்கள் செழிப்பானவை என்றும் சொற்ப விலைக்குக் கிடைப்பன என்றும் வியாபாரி சொல்லத் தெரிந்துகொண்டான். அந்த வியாபாரியுடன் தானும் அந்த ஊருக்குப்

போய்ப் பார்த்து வரப்போனான். நேரே அந்நிலங்களைப் பார்க்கவே, அவனுக்கு அவை தன் நிலங்களைவிட மேலானவைகளாகத்தோன்றின. தன் நிலங்கள் வாங்கிய விலைக்கே தான் வாங்கியதற்குப் பத்துப் பங்கு அதிகமான நிலங்கள் வாங்கக் கூடியவையாக இருந்தன.

உடனே அவன் ஊருக்குத் திரும்பி வந்து, தன் நிலங்களை விற்றான். விற்றதில் நல்ல இலாபம் கிடைத்தது. ஆடுமாடுகளையும் வீட்டையும் விற்றான்; இவைகளை விற்ற பணத்தைக்கொண்டு ஐம்பது ஏக்கர் நிலம் புது ஊரில் வாங்கினான். பிறகு தன் குடும்பத்தோடு புது ஊருக்குப் போய்ச் சேர்ந்தான்.

## IV

பாக்கியம் தான் வாங்கிய நிலத்தில் ஒரு சிறு வீடு கட்டிக்கொண்டான்; ஆடுமாடுகள் வாங்கிச் சேர்த்தான். அந்த ஊரார்கள் மிகவும் நல்லவர்களாகவே அவனுக்குத்தோன்றினார்கள். முன்பு இருந்ததைவிட இப்போது பத்துப் பங்கு அதிக நிலம் கிடைத்தது. நிலம் மிக்க செழிப்புடையதாக இருந்தால், நல்ல பலன் அவனுக்கு முதல் வருஷத்திலேயே கிடைத்தது. பாக்கியத்திற்கு ஒரு குறைவுமில்லை. நல்ல வரும்படி கிடைப்பதைப் பார்க்கப் பார்க்க, இன்னும் கொஞ்சம் அதிகமாக நிலம் வாங்கினால் நல்லது என்றும், யார் நிலம் விற்கிறார்கள் என்றும் விசாரித்துக்கொண்டேயிருந்தான். பல புது மனிதர்கள் நிலங்கள் வாங்கிக்கொண்டு குடியேறிவிட்டார்கள். இனிச் சுலபமாக நிலம் கிடைக்க கூடியதாக இல்லை. அந்த ஊரில் தானியங்கள் அதிக

மாக விளைந்ததால், பட்டணத்திலிருந்து பல வியாபாரிகள் வியாபாரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். சிலர் பெரிய வீடுகளை அந்த ஊரில் கட்டிக்கொண்டு, வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள். பாக்கியம் அவர்களைப் பார்த்து, இன்னும் கொஞ்சநிலம் கிடைத்துவிட்டால், இவர்களைப்போலப் பெரிய வீடுகள் கட்டிக்கொண்டு உடம்பை வருத்திப் பாடுபடாமல் வாழலாம் என்று நினைத்தான்; குத்தகைக்குச் சில நிலங்களை ஒப்புக்கொண்டு சாகுபடி செய்தான். அதினும் நல்ல இலாபம் கிடைத்தது. ஒரு வியாபாரியோடு சேர்ந்து குத்தகையாக நிலத்தை ஒப்புக்கொண்டு சாகுபடி செய்ய ஆரம்பித்தான். அந்த நிலத்திற்கு வேறு யாரோ பாத்தியக்காரர்கள் அது தங்களுடைய நிலம் என்றும், அதை அவன் உழக் கூடாது என்றும் தடுத்துவிட்டார்கள். இன்னும் கொஞ்சம் நிலம் தனக்குச் சொந்தத்தில் இருந்தால், அந்தக் கஷ்டமெல்லாம் ஏற்படாது என்று நினைத்து நினைத்து, பாக்கியம் வருந்தினான்.

இப்படி மூன்று வருஷங்கள் சென்றன. பாக்கியம் வெளியூர்களில் நிலங்கள் கிடைக்குமா என்று விசாரித்துக்கொண்டே யிருந்தான். கடைசியாக, அந்த ஊரில் ஒருவனுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டுத் தன் நூற்றைம்பது ஏக்கர் நிலங்களை விற்பதாகக் கூறினான். பாக்கியம் உடனே சென்று, வேறு ஒருவருக்கும் விற்கக்கூடாது என்றும், மற்றவர்கள் கேட்ட விலைக்குத் தான் நூறுரூபா அதிகமாகக் கொடுப்பதாகவும், பாதித் தொகையை அப்போதே செலுத்துவதாகவும், பிறகு இரண்டு வருஷத்தில் மீதித் தொகையையும் செலுத்தி விடுவதாகவும்

பிறருக்குத் தெரியாதபடி ஒப்பந்தம் செய்து முடித்தான். ஆயிரத்தைந்நூறு ரூபாய் செலுத்தியவுடன் கிரயப் பத்திரம் எழுதுவதாகப் பேசி முடிவு செய்தான். அன்று இரவு அயலூர் வியாபாரி ஒருவன் அந்த ஊருக்கு வந்து தங்கினான். பாக்கியம் அவனைத் தன் வீட்டிற்குத் தருவித்துச் சாப்பாடு போட்டு அவனிடம் அவன் ஊரின் பக்கத்தில் நிலங்கள் கிடைக்குமா என்றும், என்ன விலைக்குக் கிடைக்கும் என்றும் ஆவலுடன் கேட்டான். அந்த வியாபாரி மேற்கு மலையை அடுத்து ஓர் ஆற்றின் இரு கரைகளிலும் ஏராளமான நிலங்களிருப்பதாகவும், ஒரு ரூபாய்க்கு ஓர் ஏக்கர் நிலம் வாங்கலாம் என்றும், அவை வெகு செழிப்பான நிலங்கள் என்றும், தான் நூறு ரூபாய்க்கு அந்த ஊரில் சட்டைகள் வேஷ்டிகள் விற்று நூறு ஏக்கர் நிலம் வாங்கியிருப்பதாகவும் கூறித் தன் கிரயப் பத்திரத்தையும் மூட்டையிலிருந்து எடுத்துக் காட்டினான். இதை அவன் சொல்லி முடிக்குமுன் பாக்கியம் அவனை இன்னும் நிலமிருக்கிறதா என்றும், அது யாருக்குச் சொந்தமானது என்றும் நூற்றுக்கணக்கான கேள்விகள் கேட்டான்.

அதற்கு வியாபாரி, "நிலங்களுக்குக் குறைவில்லை. ஒருவருஷம்நடந்தாலும்அந்தநிலங்களின்எல்லையைக் காண முடியாது. அந்த ஊரார்களுக்கே அந்த நிலங்கள் எல்லாம் சொந்தமானவை. அவர்கள் முழு மூடர்கள். நீ கெட்டிக்காரனானால், ஒன்றுமில்லாமலே ஏராளமான நிலங்களைக் கைப்பற்றலாம்," என்று சொன்னான்.

இதைக்கேட்ட பாக்கியம், "ஒருவருக்குப் பொருள் கிடைக்க வேண்டுமானால், அது தானாகவே

வந்து சேருகிறது. நான் இந்த ஊரில் நிலம் வாங்க நினைத்துக்கொண்டிருந்தேன். கடவுளருளால் வேறு ஊரில் எனக்கு நிலம் ஏற்பட்டிருக்கிறபோது, இதை வாங்குவதற்குக் கூடுமோ? ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கு நூற்றைம்பது ஏக்கர் நிலந்தானு வாங்குகிறது? அதோடு நில்லாமல், கடனையும் தலைமேலே வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கே எனக்குத் தேவையான நிலத்தை நான் வாங்கிவிடுவேன்,'' என்ற ஆவல் மீறி, அதே நினைப்பாக இருந்தான்.

## V

வியாபாரியினிடமிருந்து அந்த மலை நாட்டிற்குப் பாதை முதலியவைகளைக் கேட்டுக்கொண்டான் அந்த வியாபாரி ஊரை விட்டுப் போனவுடனே, தன் மனைவியினிடம் வீட்டையும் ஆடு மாடுகளையும் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுத் தன் வேலையாட்களில் ஒருவனைத் துணைக்குக் கூட்டிக்கொண்டு, புறப்பட்டான். வழியில் ஒரு பட்டணத்தில் தங்கி, வியாபாரி சொன்னபடி மலை நாட்டாருக்கு வெகுமதியளிக்க அவர்களுக்குக் கிடைக்காத சாமான்களை வாங்கிக் கொண்டான். இரவும் பகலுமாக நடந்து, ஏழு தினத்தில் முந்நூறு மைலுக்கப்பாலிருந்த மலை நாட்டை அடைந்தான். அம்மலை நாட்டில் வியாபாரி சொன்னபடியே எல்லாம் இருந்தன. வியாபாரி பொய் சொல்லவில்லை என்று பாக்கியம் சந்தோஷமடைந்தான். ஏராளமான நிலம் இருந்தும், அதை அம்மலை நாட்டார் உழுது சாகுபடி செய்யவில்லை. ஆடு மாடுகள் கிடை கிடையாக மேய்ந்தன. ஆண் பிள்ளைகள் வேலையின்றித் திரிந்தார்கள். அவர்

களுக்குத் தமிழ் தெரியவில்லை. அவர்களில் தமிழ் தெரிந்தவன் ஒருவன் அகப்பட்டான். பாக்கியம் இன்னான் என்பது தெரிந்ததும், அம்மலை நாட்டார் அவனுக்குப் பெரிய கம்பளத்தை விரித்து, அதி லிருக்கச் செய்து, அவனைச் சுற்றிலும் சூழ்ந்து கொண்டு, அவன் வந்த விஷயத்தைப் பற்றி விசாரித் தனர்.

பாக்கியம் தான் அவர்களுக்குக் கொண்டு வந்த வெகுமதிகளைக் கொடுத்தான்; தான் நிலம் வாங்க வந்த விபரத்தையும் சொன்னான். அதற்கு அவர்கள் பாக்கியத்திற்கு வேண்டிய மட்டும் நிலம் கொடுப்ப தாகவும், கிராம நாட்டாண்மைக்காரரைக் கேட்டுச் சொல்லுவதாகவும் சொன்னார்கள்.

நாட்டாண்மைக்காரர் என்று பெரிய தலைப் பாகை கட்டிய ஒருவர் வந்து சேர்ந்தார். அவருக் காகத் தான் வாங்கி வந்த சாமான்களைப் பாக்கியம் வெகுமதியாக அளித்தான். கிராமத்தார்கள் சொன் னதை நாட்டாண்மைக்காரர் கவனித்துக் கேட்டு, பாக்கியத்தை நோக்கி, 'எங்களிடம் நிலங்களுக்குக் குறைவில்லை. உமக்கு வேண்டியவற்றை நீர் தடை யின்றி எடுத்துக்கொள்ளலாம்,' என்று சொன்னார்.

பாக்கியம்:—நான் நிலத்தை எப்படி எடுத்துக் கொள்ள முடியும்? அதற்கு ஏதாவது பத்திரம் எழுதி முடிக்க வேண்டாவா? நீங்கள் என்னிடம் அன்பு பாராட்டி எனக்கு வேண்டிய நிலத்தைக் கொடுப் பதாக வாக்களித்ததற்கு நான் உங்களுக்கு என்றும் கடமைப் பட்டிருக்கின்றேன். உங்களுக்கு ஏராள மான நிலங்கள் இருப்பது உண்மை. அவைகளில் எனக்கு வேண்டுவது சொற்பமே. எனக்கு எந்த

நிலங்களைக் கொடுக்கிறீர்கள் என்பதற்கும் எவ்வளவு நிலம் கொடுக்கிறீர்கள் என்பதற்கும் ஒரு கிரயப்பத்திரம் எழுதிவிட வேண்டுமென்பது எனது எண்ணம். என்னிடத்தில் நீங்கள் எல்லோரும் மாருத பிரிய முள்ளவர்களாக இருப்பீர்கள் என்பது திண்ணம். ஆனால், கால மாறுதலால் உங்கள் மக்களும் அப்படியே இருப்பார்களா என்பது சந்தேகப்படக்கூடியது. அதற்காகவே ஒரு கிரயப் பத்திரம் வேண்டுமென்பது அவசியமாகிறது. நீங்கள் இதற்குமுன் ஒரு வியாபாரிக்கும் ஒரு கிரயப் பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறீர்கள்.

நாட்டாண்மைக்காரர்:—இது சுலபத்தில் முடிகிற காரியம். எங்களில் எழுதத்தெரிந்தவன் ஒருவன் இருக்கிறான். அவனைக்கொண்டு நாளையே ஒரு கிரயப் பத்திரம் எழுதச் சொல்லிச் சமீபத்திலுள்ள பட்டணத்தில் சென்று அதை ரிஜிஸ்டர் செய்துதருகிறோம்.

பாக்கியம்:—என்ன கிரயம் கேட்கிறீர்கள்?

நாட்:—ஒரு நாள் நிலத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும்.

பாக்கியம்:—ஒரு நாள் நிலம் என்றால் என்ன? எவ்வளவு ஏக்கர் கொண்டது ஒரு நாள் நிலம்?

நாட்:—எங்களுக்கு ஏக்கர் கணக்கெல்லாம் தெரியாது. எங்களுக்கு வேறே நில அளவும் தெரியாது. நீர் எவ்வளவு தூரம் நிலத்தைச் சுற்றி ஒரு நாளில் நடக்க முடியுமோ, அவ்வளவும் உம்முடையது. அதற்குத்தான் ஆயிரம் ரூபாய் கிரயம்.

இதைக் கேட்ட பாக்கியம் ஆனந்தப் பரவசனாகி, 'அது மிகவும் அதிகமா இருக்குமே! ஒரு நாளில் எவ்வளவோ தூரம் நடக்கலாமே!' என்றான்.

நாட்:—எவ்வளவு தூரம் நடந்தாலும் அவ்வளவும் உம்முடையதே. ஆனால், அதற்கு ஒரே ஒரு நிபந்தனை மாத்திரம் உண்டு. அதாவது, ஒரே தினத்தில் நீர் எந்த இடத்திலிருந்து புறப்படுகிறீரோ, அதே இடத்திற்குத் திரும்பி வந்துவிட வேண்டும். தவறினால், ஆயிரம் ரூபாயும் எங்களைச் சேர்ந்துவிடும்.

பாக்கியம்:—நான் எவ்வளவு தூரம் போனேன் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?

நாட்:—நீர் எந்த இடத்திலிருந்து ஆரம்பிக்கிறீரோ, அந்த இடத்தில் நாங்கள் இருப்போம். நீர் மண்வெட்டி ஒன்றை உம்முடன் எடுத்துச் சென்று, நீர் போகிறபாதையின் ஒழுங்கு தெரியும்படி அவசியமான இடத்தில் ஒரு குழி வெட்டி, அதில் சில செடிகளை வெட்டி நட்டுவிட்டுப் போனால், பிறகு அப்படி நடப்பட்ட செடிகளைக்கொண்டு, ஒன்றிலிருந்து ஒன்றைச்சேர்த்து, உம்முடைய நிலத்தின் எல்லையைக் கண்டு, தீர்மானித்து விடுவோம். எவ்வளவு தூரம் சுற்றி வளைக்கமுடியுமோ, அவ்வளவு தூரம் நீர் எடுத்துக்கொள்ளலாம். ஆனால், நீர் புறப்பட்ட இடத்திற்குச் சூரியன் அஸ்தமிக்குமுன் வந்துவிடவேண்டும்.

இதைக் கேட்டவுடன் பாக்கியத்திற்கு உண்டான ஆனந்தம் தாங்க முடியவில்லை. அன்று பாக்கியத்திற்குப் பெரிய விருந்து நடந்தது. இரவானதும், ஒரு நல்ல மெத்தையைக் கொடுத்து, அதில் பாக்கியத்தைப் படுக்கச் செய்து, மலை நாட்டார் எல்லோரும் நித்திரை போயினர்

## VI

பாக்கியம் மெத்தையில் படுத்துக்கொண்டு அங்கும் இங்கும் புரண்டானே ஒழிய, அவனுக்கு நித்திரையே வரவில்லை.

தனக்குக் கிடைக்கப்போகிற நிலத்தைப்பற்றி அவனுக்கு நினைக்காமலிருக்க முடியவில்லை. "இப்போது பகற்பொழுது கூட அதிகம். ஒரு நாளில் முப்பத்தைந்து மைல் தூரம் நடக்க முடியாதா? முப்பத்தைந்து மைல் சுற்றளவில் எவ்வளவு ஏக்கர் நிலம் அடங்கியிருக்குமோ! எவ்வளவு இருந்தால் என்ன? அதிகமாகத்தான் இருக்கும். நாம் சுற்றி நடந்து போனல், மத்தியில் சாகுபடிக்கு லாயக்கில்லாத இடங்கள் இருந்தால் என்ன செய்கிறது? இருந்தால் என்ன? அதை நம்முடைய வேலையாட்களுக்கு விற்றுவிடலாம். நல்ல நிலத்தை மாத்திரம் நாம் சாகுபடி செய்தால் போதும். இவ்வளவு நிலமும் சாகுபடி செய்ய எத்தனையோ மாடு வேண்டுமே! நம்மிடமுள்ள தொகையில் ஆயிரம் ரூபாய் நிலத்திற்குப் போக, ஐந்நூறு ரூபாய் பாக்கியிருக்கிறது. அதைக் கொண்டு பத்து மாடுகளாகிலும் வாங்கலாம். பழைய நிலங்களை விற்று, ஏராளமான மாடுகள் வாங்கலாம். மாடுகள் மேய இடமா இல்லை! கண்ணுக் கெட்டிய தூரம் புல் தரையாகவே யிருக்கிறது," என்றும், இன்னும் பற்பல விஷயங்களைப்பற்றியும் நினைத்து வீணை மனே ராஜ்ஜியம் செய்ததால், கொஞ்சங்கூடப் பாக்கியத்திற்குத் தூக்கம் வரவில்லை. அவன் பொழுது விடிவதை எதிர்நோக்கி இருந்தான்.

பொழுது விடிகிற சமயம் அவன் சற்றுக் கண்ணை மூடினன்; யாரோ, தன் சமீபத்தில் வந்து நின்று

சிரிப்பதாகக் கண்டான். அவ்வுருவம் கிராம நாட்டாண்மைக்காரரைப்போலத்தோன்றிற்று. அதனால், 'பொழுது விடிந்துவிட்டதுபோல இருக்கிறது,' என்று எழுந்து, அவரிடம் போனான். அவ்வுருவம் நாட்டாண்மைக்காரர் உருவமன்று. அவனுக்கு அந் நிலங்களைப் பற்றிச்சொன்ன வியாபாரியின் உருவம் போல இருந்தது. இன்னும் நெருங்கிப் பார்த்தான். வியாபாரி காணப்படவில்லை. தான் இறந்துபோகத் தன் பிணம் அங்கே கிடப்பது போலத் தெரிந்தது. விழித்துக்கொண்டான். வியாபாரியையும் காணவில்லை; பிணத்தையும் காணவில்லை. 'இவையெல்லாம் வீண் கனவு,' என்று கிழக்கே ஆகாயத்தைப் பார்த்தான். கிழக்குச் சற்று வெளுத்திருந்தது. "இப்போதே போய் மலை நாட்டாரை எழுப்பி வந்தால் தான், சூரியன் புறப்படுகிற சமயத்தில் நடக்க ஆரம்பிக்கலாம்," என்று எண்ணிச் சென்று, அவர்களை எழுப்பினான்.

எல்லோரும் எழுந்து, சூரியன் புறப்படுமுன் ஒரு குன்றின் அடிவாரத்திற்குச் சென்றனர். நாட்டாண்மைக்காரர் ஒரு கம்பை எடுத்து அந்த மலையின் அடிவாரத்தில் நட்டு, "இந்த இடத்திலிருந்து ஆரம்பித்து, இதோ கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலிருக்கிற நிலத்தில் உமக்கு வேண்டியவற்றைச் சுற்றி நடந்து, சூரியன் அஸ்தமிக்குமுன் இந்த இடத்திற்கே வந்துவிட வேண்டும்," என்று சொன்னார்.

பாக்கியம் நாட்டாண்மைக்காரரிடம் ஆயிரம் ரூபாயைச் செலுத்தினான்; ஒரு மண் வெட்டியைத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டான்; வழியில் சாப்பாட்டுக்குக் கட்டமுது கொஞ்சமும் தண்ணீர்

குடுக்கை ஒன்றும் தன் இடுப்பில் வைத்துக் கட்டினான்; வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு, சூரியன் புறப்படுவதை எதிர்பார்த்து நின்றான். சூரியன் கீழ் வானத்தில் புறப்பட ஆரம்பித்தது. பாக்கியம் கீழ்த் திசையை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

முதலில் அவன் சாதாரணமாக நடந்தான். பிறகு அந்நேரத்தில் வேகமாக நடக்கவேண்டுமென்று வெகு வேகமாக நடக்க ஆரம்பித்தான். நடக்க நடக்க, நிலத்தின் செழிப்பைப் பார்த்துப் பாக்கியம் மனமகிழ்ந்தான். தான்போன பாதையைக் குறிக்கச் சில குழிகள் வெட்டிச் செடிகளை அவற்றில் நட்டுக் கொண்டு போனான். சுமார் ஐந்து மைல் தூரம் போன பிறகு திரும்பிப்பார்த்தான். தான் புறப்பட்ட இடம் நன்றாய்த் தெரிந்தது. சிறிது ஆகாரம் சாப்பிட்டான். தன் ஊரிலிருந்து நடந்துவந்த களைப்பாலும், இராத்திரி முழுதும் தூக்கமில்லாமலிருந்ததாலும், வெயிலில் நடப்பதாலும் அவனுக்குச்சிறிது களைப்புத் தோன்றிற்று. 'நிலம் முக்கியமானதா? களைப்பு முக்கியமானதா? வேண்டிய நிலத்தைப் பெற்றுக்கொண்டால், பிறகு களைப்பாறலாம்,' என்று எழுந்து நடக்க ஆரம்பித்தான். 'இன்னும் ஐந்து மைல் தூரம் நேரே போய்ப் பிறகுதான் இடப்புறம் திரும்ப வேண்டும்,' என்று நேரே நடந்தான். காலிலிருந்த செருப்பு இடைஞ்சலாக இருந்தது. அதையும் எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு, வெறுங் காலோடு நடந்தான். தான் சுமார் ஐந்து மைல் நடந்து, திரும்பிப் பார்த்தான். தான் புறப்பட்ட இடம் தெரியவில்லை. 'இனி நேரே போகக் கூடாது,' என்று இடப்புறம் திரும்பினான். 'இனி மூன்றுபக்

14948

கம் நடக்க வேண்டியிருக்கிறது. இரண்டாவது பக்கம் முதல் பக்கத்தைப்போல அவ்வளவு நீளமாக இருக்க முடியாது,' என்று கொஞ்சம் குறுக்கிக்கொண்டான். இரண்டாவது பக்கம் நடந்து முடிய உச்சிப்பொழுதாயிற்று. பாதிநாள் சென்றுவிட்டது. இன்னும் பாதி நாளே பாக்கியிருந்தது. அப்பொழுது பசி எடுக்கவே, மீதியிருந்த கட்டமுதைச் சாப்பிட்டான். மூன்றாவது பக்கம் திரும்ப ஆரம்பிக்கிறபோது, அந்த இடத்தில் நிலம் கொஞ்சம் பள்ளமாகவும், நன்றாகத் தண்ணீர் தானே பாயக் கூடியதாகவு மிருந்தது, 'சொற்ப செலவில் இந்த இடத்தில் நெல் விளைவிக்கலாம். இந்தப் பள்ளத்தையும் சேர்த்துக்கொண்டால் எவ்வளவோ இலாபமாக இருக்கும்,' என்று அந்தப் பள்ளத்தையும் சுற்றி வந்து, ஆகாயத்தை ஏறிட்டுப் பார்த்தான். 'முக்கால் நாள் சென்றுவிட்டது. இனிப் பாக்கி இரண்டு பக்கமும் சுற்றி நடக்க முடியாது. நமக்குச் சதுரமான நிலம் கிடைப்பதற்கு விதியில்லை. இனிக் குறுக்கே போய்ப் புறப்பட்ட இடத்தில் சேர்ந்துவிடவேண்டும்,' என்று வேகமாக நடந்தான். பாதிதூரம் போனான். பொழுது சீக்கிரத்தில் போய்விடும்போல இருந்தது. ஓட ஆரம்பித்தான். காலில் முட்கள் தைத்து இரத்தம் வடிந்ததையும் கவனிக்கவில்லை. இடுப்பிலிருந்த செருப்பு, தண்ணீர்க் குடுக்கை இவைகளை அவிழ்த்து எறிந்தான். மண் வெட்டியையும் எறிந்துவிட்டு, ஒரே ஓட்டமாக ஓடினான். கால்கள் ஒடிந்து விடும்போல இருந்தன. நெஞ்சு பொறுக்க முடியாதபடி படபடவென்று அடித்தது. கண்கள் சுழன்றன. புறப்பட்ட இடத்திற்கு ஒரு பர்லாங்கு தூரத்தில் வந்துவிட்டான்.

பொழுது போய்விட்டது. ஏக்கங்கொண்டு, 'ஐயோ!' என்று நிமிர்ந்து பார்த்தான். குன்றின்மேல் சூரிய வெளிச்சம் கொஞ்சம் தெரிந்தது. குன்றின்மேல் இருந்தவர்கள், 'ஓடிவா! ஓடிவா!!' என்று கையை அசைத்தார்கள். பாக்கியத்திற்கு நிலம் கிடைத்து விட்டதென்ற நம்பிக்கை உண்டானது. 'ஒரே மூச்சில் போய் நின்றுவிடலாம்,' என்று வேகமாக ஓடிப் போய்த் தான் புறப்பட்ட இடத்தில் நட்டிருந்த கம்பை ஒரு கையால் தொட்டுக்கொண்டு, குப்புற விழுந்தான். சூரியனும் மலைவாயில் ஆழ்ந்தான். உலகெலாம் இருள் மூடிற்று.

மலை நாட்டார்கள் ஓடிவந்து அவனைச்சூழ்ந்தார்கள். பாக்கியத்தின் வேலைக்காரன் ஓடிவந்து தூக்கினான். பாக்கியத்திற்கு வாயாலும் மூக்காலும் இரத்தம் கொட்டியது; அவன் உயிர் போய்விட்டது.

வேலைக்காரன் என்ன செய்வான்! அவன் தன் எஜமானனுக்காக அழுதான்; புரண்டான். யார் அழுதென்ன? யார் புரண்டென்ன? மாண்டார் வருவரோ? அவ்விடத்திலேயே எட்டுச்சாண் குழி ஒன்றை வெட்டினான். தலையிலிருந்து பாதம் வரையில் புதைபடப் பாக்கியத்திற்கு எட்டுச் சாண் நிலமே போதுமானதாக இருந்தது. வேலைக்காரன் தன் எஜமானனை அந்தக் குழியில் புதைத்துவிட்டு, வருத்தப்பட்டான். பாக்கியம் தேடிய பாக்கியம் இதுவே!

"வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை;
யாண்டு மஃதொப்ப தில்."

# 3. சிறு பொறியே பெருந்தீ

## I

ஒரு சிற்றூரில் இருளப்பன் என்ற ஒரு குடியான வன் வசித்து வந்தான். அவன் நல்ல திட சரீர முள்ள வன்; நோய் என்பதையே அறியாதவன்; உழவுத் தொழிலில் அவன் காலத்தில் அவனைவிட மேலான வர்கள் இல்லை.

அவனுக்கு மூன்று மக்கள் இருந்தார்கள். மூத்த மகன், கலியாணமானவன்; இரண்டாம் மகன், கலி யாணம் செய்யவேண்டிய வயதுள்ளவன்; மூன்றும் மகன், சிறுபிராய முள்ளவன். அவன் மாடு மேய்ப் பான்; நிலத்தை உழவும் கற்றுக்கொண்டு வந்தான்.

இருளப்பன் மனைவியோ, குடித்தன வேலையில் வெகு சமர்த்தி. அவன் மருமகள் வெகு சாது; நன் ருகப் பாடு படுபவள்.

இச்சிறு குடும்பத்தில் வேலை செய்யச் சக்தி யற்ற வன், கிழவனுன இருளப்பன் தகப்பன் ஒருவனே; அவனுக்குக் கிழ வயதோடு காச ரோகமும் சேர்ந் திருந்தது. அவன் ஏழு வருஷமாகப் படுத்த படுக் கையிலேயே கிடந்தான். ஆயினும் அவனை அசட்டை செய்தவர் ஒருவருமில்லை. எல்லோரும் அவனுக்கு யாதொரு குறைவு மின்றியே கவனித்து வந்தனர்.

இருளப்பன் எல்லாச் செல்வமும் பெற்றிருந் தான். அவனுக்கு ஆடுகளும் மாடுகளும் கிடை கிடை

யாக இருந்தன. ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் ஒற்றுமையாக உழைத்து வந்தார்கள்.

வேலை செய்வதால் இழிவேது? அவன் வீட்டுப் பெண்களும் வயல்களுக்குச் சென்று வேலை செய்வார்கள்; வீட்டு வேலைகளையும் குறைவறக் கவனிப்பார்கள். அவர்களுக்குச் சாப்பாட்டுக்குப் போதுமானது, அவர்கள் நிலத்திலிருந்தே கிடைக்கும். அவர்கள் நிலத்திலிருந்த தென்னை, மா முதலிய மரங்களே சர்க்காருக்குச் சேரவேண்டிய கிஸ்திக்குப் போதுமான வருமானத்தைக் கொடுத்தன. அவர்களுக்கு யாதொரு குறைவுமில்லை. தரித்திரம் என்பதை அவர்கள் அறியார்கள். அவா என்பதல்லவா தரித்திரம்? கிடைத்ததே போதுமென்ற அமைதி உள்ளவர்களுக்குத் தரித்திரம் என்பதேது? போது மென்ற உள்ளம் பொன்னிலும் பெரிது. மன அமைதியே சுக வாழ்வுக்கு இன்றியமையாதது.

அவர்களுடைய சுக வாழ்வுக்கும் ஓர் இடையூறு ஏற்பட்டது. இருளப்பன் வீட்டின் கொல்லைப்புறத்தில் நோண்டிக் கறுப்பன் என்பவன் ஒருவன் வசித்தான். அவனுக்கும் இருளப்பனுக்கும் பகை மூண்டது. அவ்விருவருடைய பெற்றோரும் உயிருடனிருந்தகாலத்தில், ஒருவருக்கொருவர் வெகு நேசமாக வாழ்ந்து வந்தனர். அவ்விருவர் வீட்டுப் பெண் பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாகவும் உதவியாகவும் இருந்து வந்தார்கள். ஒருவருக்குத் தேவையான சாமான்களை மற்றொருவர் கொடுத்து உதவுவது உண்டு. ஒருவர் வீட்டுக் கொல்லையில் மற்றொருவரின் ஆடுமாடுகள் புகுவது கிராமங்களில் சாதாரணமானது. அப்படிப் புகுந்தால், அவர்கள்

இனிமேல் ஆடுமாடுகளை அப்படி விடாம லிருக்க ஒருவரை யொருவர் கேட்டுக்கொள்வது வழக்கமே யொழிய, அப்படிப் புகுந்த ஆடு மாடுகளைப் பட்டியில் பூட்டி வைப்பது இல்லை. அவர்களுக்குள் சண்டை சச்சரவு என்பதே இல்லை.

கிழவர்கள் காலத்தில் இப்படி நடந்து வந்தது. அவர்களைப்போல அவர்கள் மக்களும் நடப்பார்களா? தகப்பனைவிட மகன் தான் புத்திசாலி என்றல்லவா நினைக்கின்றான்? அந்த இரண்டு குடும்பத்திற்கும் பகை உண்டானது ஓர் அற்ப காரியத்தைப் பற்றியேயாகும்.

## II

பொங்கற் புதுநாள் சமயம், இருளப்பன் வீட்டுக் கோழி முட்டை யிட்டுக்கொண்டிருந்தது. வைக்கோற் போரில் தினமும் அது முட்டை யிடுகிறது வழக்கம். பொங்கல் மும்மரத்தில் விளையாடும் பிள்ளைகளுக்குப் பயந்து அக்கோழி அடுத்த வீட்டுக் கொல்லைக்குள் போய்விட்டது.

இருளப்பன் மருமகள் வீட்டை மெழுகுவதும், கூட்டுவதும், பொங்கலுக்காகச் சுத்தம் செய்வதுமாக இருந்தாள். ஆகையால், கோழியைப்பற்றிய ஞாபகமே அவளுக்கில்லை.

அவள் அன்று சாயந்திரம் வைக்கோற் போரில் போய்க் கோழியைத் தேடினாள். முட்டையைக் காணவில்லை. அங்கிருந்தவர்களை விசாரித்தாள். ஒரு சிறுவன், கோழி அடுத்த வீட்டின் கொல்லைக்குள் போனதாகச் சொன்னான். அவள் அங்கே சென்றாள்.

அடுத்த வீட்டுக் கிழவி, "யாரம்மா கொல்லையிலே?" என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்

தாள். "பாட்டி, எங்கள் கோழி உங்கள் கொல்லைக்குள் இன்று பறந்து வந்தது. உங்கள் கொல்லையில் முட்டையிட்டிருக்குமோ என்று பார்க்க வந்தேன்," என்று இருளப்பன் மருமகள் சொன்னாள்.

கிழவி, "நாங்கள் பார்க்கவில்லையே! நல்லவேளையாக எங்கள் கோழிகள் எல்லாம் முட்டை யிடுகின்றன. நாங்கள் ஏன் பிறருடைய கோழி முட்டைகளை எடுக்கிறோம்? நாங்கள் முட்டை திருடிகளா? நீ நல்ல பெண் பிள்ளை! நன்றாய்க் கேட்க வந்தாய்!" என்று பதில் சொன்னாள்.

அந்தக் கிழவி சொன்ன வார்த்தைகளை அந்தப் பெண்ணுக்குப் பொறுக்க முடியவில்லை. ஆகையால் அவள் அதற்குச் சரியாகப் பதில் சொன்னாள்.

எத்தனையோ சண்டைகளில் அனுபவ மடைந்த கிழவி, இப்போது விடுவாளா? மாறி மாறி ஒருவருக்கொருவர் பேச, சச்சரவு உண்டானது. இருளப்பன் மனைவி அப்போது தண்ணீர் எடுத்து அந்த வழிச் சென்றாள். அவள் தன் மருகி கிழவியுடன் சண்டை யிடுவதைப் பார்த்துத் தண்ணீர்க்குடத்தை இறக்கிவைத்தாள்; சேலையை வரிந்து கட்டினாள்; 'வாடி, வெளியே! ஒரு கை பார்ப்போம்! நீ அவ்வளவு பேசுகிறதா!' என்று கிழவியைச் சண்டைக்கு அழைத்தாள்.

கிழவிக்குக் கிழவி சரியான ஜதைதானே! அவர்கள் இதற்கு முன் நடந்த விஷயங்களையும் நடக்காத விஷயங்களையும் கற்பித்துத் திட்டிக்கொண்டார்கள். இருதரப்பிலும் பெண் பிள்ளைகள் பலர் சேர்ந்து கொண்டார்கள். வாயால் சொல்லக் கூடாத வார்த்தைகளை எல்லாம் சொல்லி வைதுகொண்டார்கள்.

வாய்ச்சண்டை முற்றிக் கைச் சண்டையானது; ஒருத்தி மற்றொருத்தியின் சேலையைக் கிழித்தாள். ஒருத்தியை ஒருத்தி அடித்தாள். மயிரைப் பிடித்து ஒருத்தி இழுக்க, இழுக்கப்பட்டவள் அவள் காலைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளினாள். சரியான மல் யுத்தம் நடந்தது.

இந்தக் கூக்குரல் கேட்டு, ஆண் பிள்ளைகளும் ஓடி வந்தார்கள். இருளப்பனும் நொண்டிக் கறுப்பனும் வந்து சேர்ந்தார்கள். பெண் பிள்ளைகள் களைத்துப் போகவே, ஆண் பிள்ளைகள் அந்தச் சண்டையை ஏற்றுக்கொண்டார்கள். இருளப்பன் பலவானான தால், நொண்டிக்கறுப்பனுடைய மீசையின் ஒரு பாகத்தை அப்புறப்படுத்திவிட்டான்.

ஊரார்கள் ஓடி வந்து கலகத்தை அமர்த்தி விலக்கி விட்டார்கள். நொண்டிக் கறுப்பன், பிடுங்கப் பட்ட தன் மீசையை ஒரு காகிதத்தில் மடித்துக் கொண்டுபோய் மாஜிஸ்ட்ரேட்டிடம் காட்டிப் பிராது கொடுத்தான். அவன் வீட்டின் பெண் பிள்ளைகளும் பிராது கொடுத்தார்கள். இருளப்பனை மாஜிஸ்ட் ரேட்டு அந்தமான் தீவுக்கு அனுப்பப் போகிறார் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இரு தரப் பாருக்கும் விரோதம் அதிகமாக வளர்ந்துகொண்டே யிருந்தது.

இருளப்பன் தகப்பன், முதலிலிருந்தே சண்டை வேண்டாவென்று மன்றாடினான். கிழவன் பேச்சைக் குமரன் கேட்கவில்லை. கிழவன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் ஒன்றுமில்லாத அற்ப விஷயத்தைப் பெரி தாக்குகிறீர்கள். நீங்கள் செய்வதெல்லாம் முட்டாள் தனம். இவ்விஷயங்கள் எல்லாம் ஓர் அற்பக் கோழி

முட்டையைப்பற்றி உண்டாயின வென்பதைச் சற்று நினைத்துப் பாருங்கள். குழந்தைகள் அந்த முட்டையை எடுத்திருக்கலாம். அவர்களைக் கடவுள் காப்பாற்றட்டும். ஒரு முட்டையால் நமக்கு என்ன நஷ்டம் வந்துவிட்டது? கடவுள் நமக்கு வேண்டியவற்றைக் கொடுத்திருக்கிறார். இது நிற்க, உங்களை அவர்களே முதலில் திட்டினார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அவர்களைத் திருத்தி நீங்கள் அவர்களுக்கு நல்ல வார்த்தைகளைக் கற்பிக்க வேண்டுவதே முறை. இதைத் தவிர்த்து, நீங்கள் அவர்களோடு சண்டை செய்தீர்கள். அவர்களோடு நில்லாமல், நீங்களும் பாவத்தைச் செய்கிறீர்கள்.

'அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.'

என்பது நீதிவாக்கியம். இனியாவது அவர்களுடன் சமாதானமாகப் போங்கள். அவர்கள் செய்ததற்குப் பதில் நீங்கள் கெடுதிகள் செய்வது தவறு. நீங்களே இவ்விதம் செய்துகொண்டால், அது உங்கள் இரு தரப்பாருக்குமே கெடுதி," என்றும் இன்னும் பலவிதமாகவும் புத்தி கூறினான்.

கிழவன் சொன்னதை ஒருவரும் கேட்கவில்லை. 'வயதானால், அறிவு மழுங்கி மூடத்தனம் வந்துவிடும். கிழவன் பேசுவதெல்லாம் வெறும்பேச்சு,' என்று அவனை ஏளனம் செய்தார்கள்.

"கிழவனுக்கு என்ன தெரியும்? நான் அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்வேனா! பார்ப்போம்!" என்று இருளப்பன் சொல்லிவிட்டான்.

## III

இருளப்பன் பலரிடமும் சென்று, வழக்கை எவ்விதம் நடத்துகிறதென்று யோசனை செய்தான். முடிவில் தான் நொண்டிக் கறுப்பன் மீசையைப் பிடுங்கவில்லை என்றும், அவன் தானே பிடுங்கிக்கொண்டு இவ்விதம் வழக்குக் கொண்டு வந்திருக்கிறான் என்றும், தன்னை அவன் அடித்துச் சட்டைகளைக் கிழித்தான் என்றும் சொல்லிச் சட்டைகளைக் கிழித்துக் கொண்டு நொண்டிக் கறுப்பன் பேரில் ஒரு பிராது போட்டான்.

இந்த வழக்குகள் நடந்துகொண்டிருக்கிறபோது நொண்டிக் கறுப்பன் வண்டியின் கடையாணிகள் காணாமற்போயின. வண்டிச்சக்கரங்கள் நுகத்தடி முதலியன திருடுப்போயின. அவன் வீட்டுப் பெண் பிள்ளைகள் இருளப்பன் மகனே அவைகளைத் திருடியதாக எண்ணி, அவனைத் திட்டினார்கள். சிலர், 'நாங்கள் அவன் அவைகளை விற்கக்கொண்டு போனதைக் கண்டோம்,' என்றும் கூறினர்.

மறுபடியும் பிராதுகள் தாக்கல்செய்யப்பட்டன. தினமும் இரண்டு வீட்டிலும் ஜாடைகள் பேசுவதும், ஒருவரை ஒருவர் திட்டுவதும், சண்டை போடுவதும் ஓயவில்லை. பெரியவர்கள் சண்டை போடுவதைப் பார்த்துச் சிறியவர்களும் சண்டை போட ஆரம்பித்தார்கள். இரு தரப்பாரும் ஒருவர் பொருளை ஒருவர் திருட ஆரம்பித்தனர். எந்தச் சாமான் வெளியே கிடந்தாலும், திருட்டுப் போய்விடும். ஆண் பிள்ளைகளோடு அத்திருட்டு நிற்கவில்லை; பெண் பிள்ளைகளுக்கும் சிறுவர்களுக்குங் கூடத் திருடக் கற்றுக்

கொடுத்துவிட்டார்கள். எல்லாக் கோர்ட்டுகளிலும் அவர்கள் பிராதுகளே மிகுந்தன. அவர்கள் பார்க்காத கோர்ட்டுகள் இல்லை; அமர்த்தாத வக்கீல்களும் இல்லை. கிராமத்தார்களுக்கெல்லாம் அவர்கள் வியாச்சிய நிபுணர்களாகி விட்டார்கள். நியாயாதிபதிகளும் போலீஸ்காரர்களுங்கூட அவர்களை வெறுத்தார்கள். சில வழக்குகளில் நொண்டிக்கறுப்பன் ஜெயிலுக்கனுப்பப்பட்டான். இன்னும் சில வழக்குகளில் இருளப்பனும் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டான். எவ்வளவுக்கெவ்வளவு அவர்களுக்குத் துன்பம் அதிகரித்ததோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் கோபம் அதிகமாயிற்றே அன்றித் தணியவில்லை. நாய்களுக்குள் சண்டை நேருகிறபோது அவைகள் எவ்வளவுக்கெவ்வளவு சண்டைபோடுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு கோபம் அதிகப்படும். அவைகளை விலக்க உத்தேசித்து ஒருவன் பின்புறமிருந்து ஒரு நாயை அடித்தால், அந்த நாய் அந்த அடி தன்னை எதிர்த்த நாயால் உண்டானதென்று நினைத்து, அதனை அதிக கோபத்தோடு கடிக்கும். அவர்கள் தன்மையும் நாய்களின் தன்மையை ஒத்திருந்தது. அவர்களில் ஒருவனுக்கு அபராதம் அல்லது ஜெயில் தண்டனை ஏற்பட்டால், அஃது அவனுடைய கோபத்தை அதிகப்படுத்தியதே அல்லாமல், தணிக்கவில்லை. அவன், 'கொஞ்சம் பொறு. உனக்குத் தகுந்தபடி செய்கிறேன்,'' என்று சொல்லியே வெளியே வருவான்.

இவ்விதம் ஆறு வருஷங்கள் சென்றன. படுத்த படுக்கையாகக் கிடந்த கிழவன் மாத்திரம் அவர்கள் சண்டையை நிறுத்தத் தன்னால் ஆனமட்டும் முயன்

ருன். முயன்றும், பயனில்லை. "மக்களே, நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்கள் சண்டைகளை விடுத்து உங்கள் வேலைகளைப் பாருங்கள். ஒருவர்மீது ஒருவர் கோபப்படாதீர்கள். ஒருவனோடு மாத்திரம் இது நில்லாது. கோபத்தால் கெட்டவர் கோடிபேர். கோபமே குடிக்கு நாசம் விளைக்கும். கோபமே கொலைக்கு மூலம்," என்று அவர்களுக்கு நீதி உபதேசம் செய்தான். கிழவன் வார்த்தைகளில் ஒன்றும் அவர்கள் செவியில் நுழையவில்லை.

## IV

ஏழாவது வருஷம் அவர்கள் ஊரில் ஒரு கலியாணம் நடைபெற்றது. அப்போது பலர் முன்னிலையில் இருளப்பன் மருமகள், நொண்டிக் கறுப்பன் மாடு திருடிக் கையும் களவுமாக அகப்பட்டதாகச் சொன்னாள். நொண்டிக் கறுப்பன் அப்போது குடித்திருந்தான். அதனால், அடக்க முடியாத கோபம் அவனுக்கு வந்துவிட்டது. அவன் தான் மாடு திருடியதாகச் சொன்னவளைப் பலமாக ஓர் அடி அடித்தான். அவள் சுருண்டு கீழே விழுந்தாள். அப்போது அவள் கர்ப்பவதியாக இருந்ததால், அவள் பிழைக்கமாட்டாள் என்றே பலரும் எண்ணினர்.

இவ்விஷயம் இருளப்பன் ஒரு விதத்தில் சந்தோஷப்படக்கூடியதாய் இருந்தது: "சரியாக வந்து அகப்பட்டான்! இனி அவன் தப்பப்போகிறதில்லை!" என்று சொல்லிக்கொண்டு இருளப்பன் போலீசுக்கு, ஒரு பிராது எழுதிக்கொண்டு ஓடினான். இருளப்பன் எண்ணம் பூர்த்தியாகவில்லை. வைத்தியர் இருளப்பன் மருமகளைப் பரிசோதித்தார். ஒருகாயமுமில்லை. அவ

ளுக்கு ஒருவிதக் கெடுதியும் ஏற்படவில்லை. ஆயினும், இருளப்பன் மாஜிஸ்ட்ரேட்டிடம் பிராது கொடுத்தான்; 'இம்முறை சரியானபடி தண்டித்துவிட வேண்டும்!' என்று பணத்தை வேண்டியபடி செலவழித்தான். கடைசியாக நொண்டிக் கறுப்பனைப் பலர் முன்னிலையில் சவுக்காலடிக்கும்படி தீர்ப்பானது.

தீர்ப்புச் சொன்னவுடன், இருளப்பன் சந்தோஷத்தோடு நொண்டிக் கறுப்பனை நோக்கினான். நொண்டிக் கறுப்பன் முகம், வெளுத்துப் போய் நின்றான். இருளப்பன் கோர்ட்டை விட்டு வெளியே போகப் புறப்பட்டான். "சரி என்னைச் சவுக்கால் அடிப்பதால் என் முதுகு எரியும்; எரியட்டும். இன்னும் அவன் சாமான்களும் எரியாமல் போகுமா?" என்று நொண்டிக் கறுப்பன் சொன்னது இருளப்பன் காதில் விழுந்தது. உடனே இருளப்பன் திரும்பி, "கோர்ட்டார் அவர்களே, என் வீட்டில் நெருப்பு வைப்பதாகச் சொல்லுகிறான். அவன் சொல்வதைக் கேளுங்கள்," என்றான். நொண்டிக் கறுப்பன், "நான் அவ்விதம் சொல்லவேயில்லை. என்னை அடியுங்கள்; ஜெயிலுக்கு அனுப்புங்கள். அப்படிச் செய்ய உங்களுக்கு அதிகாரமுண்டு. நன்மை செய்கிறவன் கஷ்டப்பட வேண்டுவதுதான்," என்று சொல்லி இன்னும் சொல்ல ஆரம்பித்தான். அவன் முகம் வெளுத்து, உதடு துடித்தது. அதனால், மேலே ஒன்றும் சொல்லாமல் நின்றான்.

அவன் ஏதோ தீமை செய்யப்போகிறான் என்பது கோர்ட்டாருக்குப் புலப்பட்டது. உடனே கோர்ட்டார் கோர்ட்டில் இருவரையும் கூப்பிட்டு, "நீங்கள்

இருவரும் சமாதானமாகப் போங்கள். மனம் ஒத்து அவ்வாறு செய்வதுதான் உங்கள் இருவருக்கும் நன்மை," என்று சொன்னார்.

உடனே கோர்ட்டுக் குமஸ்தா எழுந்து, "சவுக்கடி கொடுக்கும்படி தீர்ப்பு எழுதிய பிறகு சமாதானமாகப் போகச் சட்டத்தில் இடமில்லை. சவுக்கடி அடித்தே தீர வேண்டும்," என்றார்.

**கோர்ட்டார்**, "சட்டம் உள்ளபடி இருக்கட்டும். இவர்கள் சமாதானமாகப் போகிறார்கள், இல்லையா? இந்தச் சட்டங்களைவிடக் கடவுளின் சட்டமே பெரிது. கடவுள் எல்லோருடனும் ஒத்து வாழவே மனிதருக்கு ஆஞ்ஞாபித்திருக்கிறார்," என்று சொன்னார்.

இருளப்பனுக்காவது நொண்டிக் கறுப்பனுக்காவது சமாதானமாகப் பிரியமில்லை. கோர்ட்டார் மறுபடியும் அவர்களுக்கு ஒத்து வாழ்வதனால் ஏற்படும் நன்மையைப் பல முறை எடுத்து ஓதினார். அவர்கள் அறிவுக்கு அதன் உண்மைகள் புலப்படவில்லை. இவைகளைக் கேட்டு நொண்டிக் கறுப்பன், "எனக்கு ஐம்பது வயதாகிறது. என் மகனுக்கும் கலியாணமாயிற்று. நான் இதுவரையில் சவுக்கடி பட்டதில்லை. இருளப்பனே என்னை இந்த அவமானத்துக்குக் கொண்டு வந்தவன். அவனை நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்வேனா? போதும்! நடப்பது நடந்தே தீரும். நானும் அவனை மறந்து போகமாட்டேன்," என்று சொன்னான்.

அதன் பிறகு அவனால் பேச முடியவில்லை. ஆத்திரம் அவன் தொண்டையை அடைக்க, வாய் பேசாது, வெளியே போனான்; சட்டப்படி சவுக்கடியும் பெற்றுக்கொண்டான்.

## V

இருளப்பன் ஊருக்கும் கோர்ட்டுக்கும் ஏழு மைல் தூரம் உண்டு. இருளப்பன் ஊர் போய்ச் சேர இருட்டி விட்டது. அவன் வீட்டில் பெண் பிள்ளைகள் வயல்களுக்குச் சென்றவர்கள் வந்து சேரவில்லை. நொண்டிக் கறுப்பன் வார்த்தைகள் அவன் காதில் தொனித்துக்கொண் டிருந்தன. அவன், வீட்டில் ஒரு பெஞ்சியின்மேல் உட்கார்ந்து, நடந்தவைகளைச் சிந் திக்க ஆரம்பித்தான். அவன் மனத்தில் சிறிது இரக் கம் உண்டானது. அவன் தகப்பனுடைய இருமல் சத்தம் கேட்டது. தகப்பனிடம் சென்றான்.

தகப்பன் படுக்கையிலிருந்து இருமிக்கொண்டே எழுந்து உட்கார்ந்து, "அவனைத் தண்டித்து விட் டார்களா?" என்று கேட்டான். இருளப்பன், "ஆம்" இருபது அடி சவுக்கடி அடிக்க உத்தரவானது என்று சொன்னான். கிழவன் தலையை ஆட்டிக் கொண்டு, "மகனே, நீ செய்வது கெட்டது. நீ செய் வது அவனுக்குக் கெடுதியன்று; உனக்கே பெருங் கேடு. கோர்ட்டார் அவனைச் சவுக்காலடித்தால், அத னால் உனக்கு என்ன இலாபம்?" என்றான்.

இருளப்பன், "இனியாகிலும் அவன் அப்படிச் செய்யாமலிருப்பானல்லவா?" என்றான். கிழவன், "என்ன செய்யாமலிருப்பான்? உன்னைவிட அதிக மாக என்ன கெடுதி அவன் உனக்குச் செய்தான்?" என்று கேட்டான். இருளப்பனுக்குக் கோபம் அதி கரித்தது. "என் மனைவியை அவன் சாகும்படி அடித்துவிட்டான். அதுவுமன்றி, வீட்டில் நெருப்பு வைப்பதாகவும் என்னைப் பயமுறுத்துகிறான். இதற்

காக நான் அவன் காலில் போய் விழவேண்டுமா? நல்ல புத்தி! இந்தப் புத்தியைக் கேட்டால் நான் நன்ருக வாழலாம்!'' என்று இருளப்பன் கிழவனை இகழ்ந்து கூறினன்.

இதைக்கேட்ட கிழவன், துக்கப்பட்டு, "இருளப்பா! நீ உலகத்தில் பல இடங்களில் சுற்றியும், பல கோர்ட்டுகளுக்குச் சென்றும் இருக்கிருய்? நானே, ஏழு வருஷமாகப் படுத்த படுக்கையில் கிடக்கிறேன். அதனல், நீ உலகத்தைப்பற்றி ஒன்றும் எனக்குத் தெரியாது என்றும், உனக்கே எல்லாம் தெரியும் என்றும் நினைக்கிருய். மகனே, அப்படி நினையாதே. கோபமும் பகையும் உன் கண்களைக் கெடுத்து, உன்னைக் குருடனுக்கிவிட்டன. ஆகையால், உனக்கு உலகத்தைப் பார்க்கவும் அறியவும் சக்தியில்லை. பிறர் செய்கிற குற்றங்களும் பாவங்களுமே உன் முன் தோன்றுகின்றன. நீ உன்னுடைய குற்றங்களையும் பாவங்களையும் மூட்டையாகக் கட்டி உன் முதுகில் போட்டுக்கொண்டிருக்கிருய்; அதனல், உனக்குமுன் அவைகள் தோன்றமாட்டா. நீ யோசித்துப் பார். தீமை செய்தவன் அவனு? நீயா? தீமை என்பது ஒரு மனிதனல் மாத்திரம் உண்டாவதல்லவே! இரண்டு மனிதர்களுக்கிடையில்தான் தீமை உண்டாகிறது. இரண்டு கைகள் சேர்ந்தால்தானே சத்தம் உண்டாகும்? அவனுடைய குற்றங்களை மாத்திரம் நீ பார்க்கிருயே அன்றி உன்னுடைய குற்றங்கள் உனக்குத் தோன்றவில்லையே! அவன் மாத்திரம் கெட்டவனுக இருந்து நீ நல்லவனுக இருந்தால், தீமை என்பதே உண்டாகாதே! அவன் மீசையைப் பிடித்து இழுத்தவன் யார்? அவன் வைக்கோலைத் திருடியவன் யார்?

அவனைக் கோர்ட்டுக்கு இழுத்தவன் யார்? இப்போது நீ அவனை எல்லாக் கெடுதிகளையும் செய்வதாகச் சொல்லுகிறாயே! நீ செய்வதே முழுதும் கெட்டது. அதனால்தான் தீமை உனக்கு வருகிறது. நீ நல்லது செய்தால், உனக்கு நன்மை விளையாமற் போகுமா? நான் இப்படி வாழவில்லை. நானும் அவன் தகப்பனும் எவ்வளவோ ஒற்றுமையாக வாழ்ந்தோம். அடுத்த வீட்டுக்காரரும் நாமும் ஒற்றுமையாக இருந்தால், நமக்கு அஃது எவ்வளவு நன்மை! எவ்வளவு உதவி! எவ்வளவு சுகம்! எவ்வளவு இன்பம்! எங்கள் காலத்தில் நாங்கள் இந்தச் சுகத்தை இனிது அனுபவித்தோம்! நீங்களும் ஒற்றுமையாக இருந்தால், இப்படியே வாழ்ந்திருக்கலாம். நீ ஒரு குடும்பி. நீ உன்னுடைய வீட்டு எஜமானன். உன்னுடைய மனைவி மக்களை நல்வழிப்படுத்துவதும், அவர்களுக்கு நல்ல பழக்கங்களையும் ஒழுக்கங்களையும் கற்பிப்பதும் உன்னுடைய கடமை. உன் வீட்டுப் பெண் பிள்ளைகளுக்கும் பிள்ளைகளுக்கும் நீ என்ன போதித்திருக்கின்றாய்? பகைத்துக்கொள்ளவும், சண்டை போடவும், திட்டவும் அவர்களுக்கு நீ கற்றுக் கொடுத்திருக்கிறாய். நேற்று உன்னுடைய பையன் கெட்ட வார்த்தைகளைச் சொல்லி வைதான். அவற்றைக்கேட்டு அவன் தாய் அளவற்ற சந்தோஷப்பட்டுச் சிரித்தாள். இது சந்தோஷப்படக் கூடியதா? இவைகளுக்குக் காரணமாக இருந்தவன் யார்? நீ அல்லவா? உன்னைச் சேர்ந்தவர்களை கெடுத்தது மல்லாமல் உன்னையும் நீ கெடுத்துக் கொண்டாய். உன்னுடைய ஆத்துமாவின் நிலைமையை நினைத்துப் பார். உன்னுடைய வழக்கை நீ ஜயிக்கும் பொருட்டு

நீ எவ்வளவு பொய் சொல்லியிருப்பாய்? எவ்வளவு பாவம் செய்திருப்பாய்? இவைகள் எல்லாம் பிறருக் குத் தெரியா என்று நீ எண்ணியிருக்கலாம். நியா யாதிபதிகளையுங் கூட ஏமாற்றிவிட்டேனே!' என்று நீ இறுமாந்திருக்கலாம். இவைகள் எல்லாம் கடவு ளுக்குத் தெரியாமலிருக்கும் என்று நினைக்கிறாயா? நீ இவ்வுலகத்தார் ஏற்படுத்திய கோர்ட்டார்களை ஏமாற்றலாம்; அவர்களால் விதிக்கப்படும் தண்டனையி லிருந்து தப்பலாம்; கடவுளை ஏமாற்ற உன்னால் முடியுமா? கடவுள் தண்டனையிலிருந்து தப்ப முடியு மா? 'ஒருவன் செய்ததற்குப் பதில்தானே நான் செய்தேன்! நானாக ஒன்றும் செய்யவில்லையே!' என்று நீ சொல்லுவாய். அது சரியானதா என்று நினைத்துப்பார். நீ ஒரு வார்த்தை சொன்னால், நான் இரண்டு வார்த்தை சொல்வது சரியாகுமா? நீஅடித் தால் நானும் திருப்பி அடிக்கலாமா? திருப்பி அடிப் பது பெருமையா, திருப்பி அடிக்காமல் பொறுத்துக் கொள்ளுவது பெருமையா?

"ஒறுத்தார்க்(கு) ஒருநாளேஇன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்."

இருளப்பா நீ ஏன் பேசாமலிருக்கிறாய்? நான் சொல்வன எல்லாம் உண்மை என்பது உனக் குப் புலப்படுகிறதா? நான் சொன்ன நீதிகள் எல் லாம் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டவை. இவைகள் எல்லோருடைய நன்மைகளுக்காகவும் ஏற்படுத்தப்பட்டவை. உன்னுடைய நன்மைக்கு இவைகள் பொருந்தாதன என்று நீ நினைக்கி றாயா? உன்னுடைய வாழ்வை நினைத்துப் பார்.

இந்தச் சண்டைக்குப் பிறகு உன்னுடைய வாழ்வு மேன்மைப்பட்டதா, அல்லது குறைந்ததா? நீ செலவழித்த பணம் எவ்வளவு என்று எண்ணிப் பார். கோர்ட்டில் அழித்தது எவ்வளவு? வக்கீல் களுக்குத் தொலைத்தது எவ்வளவு? சாப்பாடு, வண்டி, இரயில், மோட்டார் இவைகளுக்குக் கொடுத் தது எவ்வளவு? சாக்ஷிகளுக்காகச் செலவழித்தது எவ்வளவு? உனக்கு முன்னிருந்த ஆஸ்தி எவ்வளவு? இப்போது இருப்பது என்ன? அஃது ஏன் குறைந் தது? எல்லாம் உன் செய்கையால்தானே! உன்னு டைய இறுமாப்பால்தானே! உன்னுடைய பூமியில் உழுது பாடுபடுவதை விட்டுக் கோர்ட்டுகளிலும் வக் கீல்களிடமும் போய் அலைகிறாய்; பருவத்தே பயிர் செய்ய வேண்டும். காலா காலத்தில் உழுது பயிர் செய்யாவிட்டால், என்ன பலன் கிடைக்கும்? சென்ற வருஷம் சோளம் என்ன கண்டது? நீ எந்த மாதம் விதைத்தாய்? நெல் என்ன கண்டது? உன் னுடைய வழக்குகளிலிருந்து என்ன வரும்படி வந் தது? உன்னுடைய மக்களுடன் நீ ஏன் உழக்கூடாது? உனக்கு எவனாவது கெடுதி செய்தால், அவனைக் கடவுளிடம் ஒப்பித்துக் கடவுளின்மேல் பாரத் தைப் போட்டு, நீ ஏன் அவனை மன்னிக்கக் கூடாது? கடவுள் அவனைத் தண்டியாமல் விடுவாரா? நீ அப் படிச் செய்தால், உனக்கு ஒரு கெடுதியுமில்லை. உன் வேலையைப் பார்க்க உனக்கு அதிக அவகாசமும் ஏற்படும். உன் ஆத்துமாவுக்கும் மனத்திற்கும் அமைதி உண்டாகும். இந்த விவகாரங்கள் தொடங் கியது முதல், உனக்கு அரைக் கணமும் அமைதி உண்டா? நல்ல தூக்க முண்டா? நல்ல உண

வுண்டா? இவையெல்லாம் உனக்குக் கெடுதி செய்தவனுக்கு நீயே பதில் செய்ய நினைத்ததால் உண்டானவை அல்லவா? அவனைக் கடவுளிடம் ஒப்பித்திருந்தால், உனக்கு எவ்வளவு நன்மையாக இருந்திருக்கும்!

“திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந் (து)
அறனல்ல செய்யாமை நன்று.”

என்பது எவ்வளவு அனுபவித்து எழுதப்பட்டிருக்கிறது!” என்று பற்பல விதமாக அறிவுறுத்தினான்.

இருளப்பன் இவைகளைக் கேட்டுப் பேசாமலிருந்தான். கிழவன் மறுபடியும், “நான் சொல்வதைக் கேள்: நானோ, கிழவன். உடனே நீ கோர்ட்டுக்குப் போய் அவனுக்குச் சவுக்கடி இன்னம் கொடுபடாமலிருந்தால், அதை நிறுத்த வேண்டிக்கொள்; நொண்டிக் கறுப்பனை வீட்டிற்கு அழைத்து வா. உங்களுடைய சண்டைகளை விட்டுவிடுங்கள். இனிச் சண்டையே கூடாது என்று உன் மனத்தைத் திடப்படுத்திக்கொள். உன்னுடைய பெண் பிள்ளைகளுக்கும் பிள்ளைகளுக்கும் இதைச் சொல்,” என்று சொன்னான்.

உருக்கத்தோடு சொன்ன கிழவன் வார்த்தைகளைக்கேட்ட கல்லும் உருகும். ஆகையால், இருளப்பன் மனமும் சற்று இளகிற்று. கிழவன் சொல்வது உண்மைதான் என்று அவன் நினைத்தான். ஆனால், “அந்த அயோக்கியனிடம் நானா போகிறது? அவனோடு நான் எப்படிச் சமாதானமாகப் போகிறது?” என்று யோசித்துக்கொண்டு நின்றான்.

அவன் மனத்தில் நிகழ்ந்தவைகளை எல்லாம் கிழவன் கண்டுகொண்டான். அவன் மறுபடியும் "மகனே, நீ யோசிக்காதே. இதனால் உனக்கு ஒன்றும் தாழ்வு இல்லை. இதைத் தள்ளி வைக்காதே; உடனே செய். பிடிக்கிற போதே நெருப்பை அணைத்துவிடு. அதிகம் பரவி விட்டால், ஒருவராலும் அதை அணைக்க முடியாது," என்று கூறிப் பின்னும் என்னவோ சொல்ல நினைத்தான். ஆனால், அதற்குள் பெண் பிள்ளைகள் சத்தம் போட்டுக் கொண்டும் திட்டிக்கொண்டும் வந்துவிட்டார்கள். இருளப்பன் கிழவனை விட்டுவிட்டு, அவர்களுடன் பேசத் தொடங்கிவிட்டான்.

## VI

இருளப்பன் வீட்டுப் பெண் பிள்ளைகளுக்குக் கோர்ட்டில் நடந்த விஷயங்கள் வயலில் அவர்களிருந்தபோதே தெரிந்துவிட்டன. அதனால், அவர்கள் வீட்டுக்கு வரும்போதே வழியில் நொண்டிக் கருப்பன் வீட்டுப் பெண் பிள்ளைகளிடம் சண்டை பிடித்துக்கொண்டு வந்தார்கள்; இருளப்பனைக் கண்டவுடன் அவனிடம் அதைப்பற்றி முறையிட்டார்கள். எல்லா விஷயங்களையும் கண்டு தங்கள் பேரில் கலெக்டர்துரை அவர்களுக்கு மனுப் போட்டிருப்பதாகவும், போலீசார் தங்கள் எல்லோரையும் கைது செய்ய வருவதாகவும் சொன்னாள் என்று இருளப்பன் மருமகள் தெரிவித்தாள். இவைகளைக் கேட்ட இருளப்பனுக்குச் சற்று இளகியிருந்த மனமும் கெட்டிப்பட்டது.

வழக்கில் வெற்றி யடைந்ததைப் பற்றி அவர்கள் எல்லாம் சந்தோஷப்பட்டார்கள். அன்று இரவு பெரிய விருந்து நடந்தது. இருளப்பன் கிழவன் சொன்ன நீதிகளை முற்றிலும் மறந்துவிட்டான். விருந்து நடந்தவுடன் இருளப்பன் வெளியே போனான். அடுத்த வீட்டுக் கொல்லையில் சத்தம் கேட்டது. இருளப்பன் சத்தம் செய்யாமல் கிட்ட சென்று, உற்றுக்கேட்டான். நொண்டிக் கருப்பன் திரும்பி வந்துவிட்டான். சவுக்கடியை நினைத்து அவன் வீட்டுப் பெண் பிள்ளைகள் அழுதார்கள்; திட்டினார்கள். நொண்டிக் கறுப்பன், "இருக்கட்டும்! இதற்கெல்லாம் அவனைக் கொல்லாமல் விடுவேனா!" என்றான்.

இதைக் கேட்டவுடன் இருளப்பன் விரைந்து வீட்டிற்கு வந்தான். வீட்டில் எல்லோரும் சந்தோஷமாக இருந்தனர். இருளப்பனுக்குச் சந்தோஷம் உண்டாகவில்லை. அவன் படுத்துக்கொண்டான். தூக்கம் வரவில்லை. நடு இரவாயிற்று. அவன் எழுந்து வெளியே போனான். 'வீட்டைச் சுற்றிப் பார்க்கலாம்,' என்று புறப்பட்டான். 'உன் சாமான்கள் எரியாமலிருக்குமா? என்று நொண்டிக் கருப்பன் சொன்னது அவன் ஞாபகத்திற்கு வந்தது. அப்போது கோடைக் காலமானதால், எல்லாம் உலர்ந்தன. "கொல்லை வழியாக வந்து நொண்டிக் கருப்பன் நம் வீட்டுக்கு நெருப்பு வைத்துவிட்டால் என்ன செய்கிறது!" என்று நினைத்தான். 'கொல்லைப் புறம் போய்ப் பார்க்கலாம்,' என்று போகப் புறப்பட்டான். கொல்லை வாயிலைத் தாண்டியவுடன், வேலிக்குச் சமீபத்தில் ஏதோ நகருவது போலத்

தெரிந்தது. சத்தம் செய்யாமல் மெதுவாகச் சென்ருன். ஒன்றும் காணப்படவில்லை. சற்று நின்று நிதானித்துப் பார்த்தான். ஒன்றும் தென்படவில்லை. உற்றுக் கேட்டான். ஒரு சத்தமும் கேட்கவில்லை. வேலியைச் சுற்றி நடந்தான். வைக்கோற் போரில் ஒரு சிறு வெளிச்சம் தெரிந்தது. வைக்கோலில் தீப்பிடித்தது. தீ வெளிச்சத்தில் நொண்டிக்கறுப்பன் நிற்பதைக் கண்டான். இருளப்பன் மனம் துடித்தது. ஆகையால், அவன், 'சரியானபடி அகப்பட்டான்! இவனைப் பிடித்து இப்போதே கட்டி விடுகிறேன்!' என்று புலி போலப் பாய்ந்தான். நொண்டிக் கறுப்பனை இருளப்பன் துரத்தியும் நொண்டிக்கறுப்பன் சாதுரியமாகத் தப்பித்துக் கொண்டான். கொல்லையிலிருந்த சிறு சுவரைத் தாண்டி நொண்டிக் கறுப்பன் குதித்தான். இருளப்பன் அவன் வேஷ்டியைப் பிடித்து இழுத்தான். நொண்டிக்கறுப்பன் வேஷ்டியைத் திடீரென்று அவிழ்த்துவிடவே, இருளப்பன் இழுத்த வேகத்தால் கீழே விழுந்தான்; எழுந்து சுவரைத் தாண்ட எத்தனித்தான். அவன் தலையில் ஒரு பலமான தடி அடி விழுந்தது. இருளப்பன் கலங்கிக் கீழே விழுந்தான். சிறிது நேரம் வரையில் அவனுக்கு மூச்சே வரவில்லை. பிறகு மெதுவாக எழுந்து பார்த்தான். வைக்கோற் போரிற் பிடித்த தீ வீட்டிலும் பிடித்தது. வீடு பாதி வெந்துவிட்டது. 'முதலில் தீயைப் பார்த்தபோதே நெருப்புப் பிடித்த வைக்கோலை மாத்திரம் இழுத்தெறிந்து தீயை அவித்திருக்கக் கூடாதா? என்ன காரியம் செய்துவிட்டேன்!' என்று மனம் புழுங்கினான்; பைத்தியம் பிடித்தவன்

போல ஓடினான். நெருப்பில் விழுந்து எரிந்துகொண்டிருந்த கட்டைகளைப் பிடித்து இழுத்தான். நெருப்பு இருளப்பனையும் தாவிற்று. அருகி லிருந்தவர்கள் அவனை அப்புறப்படுத்தினார்கள்.

இருளப்பன் தகப்பனையும் நெருப்புப் பிடித்த வீட்டிலிருந்து சிலர் அப்புறப்படுத்தி விட்டனர். அப்புறப்படுத்தும் போது தீப்பிடித்த வீட்டின் எரி கொள்ளிகள் அவன் மேலே விழுந்தன. இதனாலும், நோயாலும், தன் மகன் நல்லவனாகவில்லையே என்ற விசனத்தாலும் கிழவன் சாகக் கூடிய நிலைமைக்கு வந்து விட்டான். வேறொரு வீட்டிற்குக் கிழவனைத் தூக்கிச் சென்றார்கள். காற்று நன்றாக வீச ஆரம்பித்தது. இருளப்பன் வீடு முழுதும் வேகுமுன் நொண்டிக் கறுப்பன் வீட்டிலும் நெருப்புப் பிடித்தது. ஒவ்வொரு வீடாக நெருப்புத் தாவ, ஊர் முற்றிலும் எரிந்து போயிற்று.

## VII

சாகக் கிடந்த கிழவன், தன் மகனை அடிக்கடி கூப்பிட்டான். இருளப்பனோ, துக்கத்தால் பைத்தியம் பிடித்தவன்போல ஆனான். 'அப்போதே அவித்திருக்கக் கூடாதா!' என்று உளறிக்கொண் டிருந்தான். அவனை அவன் தகப்பன் முன்னிலையில் சிலர் கொண்டு போய்ச் சேர்த்தனர்.

கிழவன் எல்லோரையும் போகச் சொல்லிவிட்டுத் தன் மகனைப் பார்த்து, "மகனே, நான் உனக்கு என்ன சொன்னேன்? யார் ஊரை எரித்தது?" என்று கேட்டான்.

இருளப்பன், "அப்பா, நொண்டிக் கறுப்பன் தான் நமது வைக்கோற் போரில் நெருப்பு வைத்தவன். நான் அதை நேரில் பார்த்தேன். ஆனால், அவன் நெருப்பு வைத்த ஒரு பிடி வைக்கோலை நான் அப்போதே இழுத்திருந்தால், இந்தக் கொடுமை நேர்ந்திராது," என்று மிக்க விசனத்துடன் கூறினான்.

கிழவன், "நான் சாகப் போகிறேன். இக்காயம் அநித்தியமானது. உலகத்தில் யாவரும் ஒரு நாள் இறக்க வேண்டியவரே. இப்போது நீயே சொல்: அது யாருடைய குற்றம்?" என்றான்.

இருளப்பன், ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தான். இருளப்பனுக்கு அப்போதுதான் புத்தி வந்தது. அவன் தகப்பன் போதித்த நீதிகளின் உண்மை அப்பொழுதுதான் அவனுக்குப் புலப்பட்டது. அவன் கண்ணீர் ததும்ப, தன் தந்தையை நோக்கி, "அப்பா, அஃது என்னுடைய குற்றந்தான்," என்று சொல்லித் தகப்பன் காலில் விழுந்தான். 'அப்பா, என்னை மன்னித்துவிடும். நான் பாவி! உம் புத்தியைக் கேளாமல், உமக்கும் கெட்டவனானேன்! கடவுளுக்கும் கெட்டவனானேன்!' என்று கூறி மன்றாடினான்.

கிழவன், கண்ணை மூடிக்கொண்டு, கடவுளைத் தியானித்தான். 'இறைவனே, உனக்கு நாங்கள் பல விதத்திலும் கடமைப்பட்டிருக்கின்றோம். நீ இச்சிறுவனைக் காப்பாற்றுவாயாக,' என்று கூறித் துதித்துப் பிறகு, 'என் மகனே, நான் சொல்வதை நீ இனியாவது கேட்பாயா ?' என்றான்.

இருளப்பன் அழுதுகொண்டே, 'ஆ ஆ !! அப்படியே செய்கிறேன்,' என்றான்.

கிழவன், " நீ என்னசெய்ய உத்தேசித்திருக்கிறாய்? " என்றான்.

இருளப்பன், அழுகையோடு, 'அப்பா, எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நான் எப்படி இனிப் பிழைக்கப் போகிறேன்!' என்றான்.

கிழவனுக்கு அந்தியகாலம் நெருங்கியது. அவன் கண்கள் சுழல ஆரம்பித்தன. அவன் தன் கண்களை மூடிக்கொண்டான். மூச்சு இழுத்துக்கொண்டிருந்தது. அவன் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்து, மெல்லிய குரலோடு, " கடவுளை மறவாதே. எல்லாம் உனக்கு நன்மையாக முடியும். கடவுள் பிரியப்படும்படி நடந்துகொள், " என்று சொன்னான். மூச்சுத் தேங்கியது. பேச முடியவில்லை. சற்றுப் பேசாமலிருந்தான். பிறகு மெதுவாக, 'பிறர் குற்றங்களை நீ மன்னித்தால், கடவுள் உன்னையும் மன்னிப்பார்; கடவுள் காப்பார்,' என்று சொல்ல ஆரம்பித்து, அதைச் சொல்லி முடிக்குமுன் அவன் வாய் குழறிப் போனது; பேச முடியவில்லை. அவன் தன் கண்களைத் திறந்து உயர நிமிர்ந்து பார்த்து, இரண்டு கைகளையும் சேர்த்துக் கும்பிட்டான். உயிர் போய் விட்டது.

இருளப்பன் பிறகு தன் வைக்கோற் போரில் யார் தீ வைத்தவன் என்பதை ஒருவரிடமும் சொல்லவில்லை. நொண்டிக் கறுப்பன், 'என் இருளப்பன் இன்னும் பிராது கொடுக்கவில்லை!' என்று ஆச்சரியப் பட்டான்.

இருளப்பன் ஒரு நாள் நொண்டிக் கறுப்பனைக் கண்டு, தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். அதிலிருந்து அவர்கள் குடும்பச் சண்டை

ஓய்ந்தது. புது வீடுகள் கட்டும் வரையில் அந்த இரண்டு குடும்பத்தாரும் ஒரே வீட்டில் தங்கிக் குடியிருந்தனர். 'போலீசாராலும், கோர்ட்டுகளாலும், சட்டங்களாலும், தண்டனைகளாலும் அ[illegible] முடியாததை, நம் கிழவருடைய அமைதியா[illegible]த அடக்கியதே!' என்று இருளப்பன் தி[illegible]ந்தான். கிழவன் நீதி வாக்கியங்களை அவன் [illegible] மறக்கவில்லை. முன்போல அவர்களுடைய [illegible] குடும்பங்களுக்கும் ஒற்றுமை ஏற்பட்டு, எல்லோரு[illegible] சுகமாக வாழ்ந்தனர்.

> " இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல்.

சுபம்.

சென்னை-600 008
149489

Kesari Printing Works, Madras.